தென்மொழி



புலியோ புலி !

புலியோ புலி, புலி புலி புலி !
பொங்கிப் பாயும் மறப்புலி !
வலியோ வலி ! ஆனல் இந்திய
வஞ்சப் படைக்குப் பலி பலி பலி!

ஆண்ட தமிழர் மாண்ட உரிமை
அனைத்தும் மீட்கும் திறப்புலி !
நீண்ட முயற்சி செய்து கழுத்தை
நெரித்த படைக்குப் பலி பலி பலி !

செந்தமிழர் மறவன் பிரபா கரனின்
சீறும் மறவர் புலிப்படை
இந்தியப் படைக்குத் தவிப்புக் காட்டி
ஈகம் செய்தது வெளிப்படை !

ஈழத் தமிழர் உரிமை கோரும்
எழுச்சி கொண்ட வீரர்கள் !
பாழும் இனத்தை மீட்கத் துணிந்த
பாண்டிய சோழ சேரர்கள் !

அடிபட் டோய்ந்த புலிகள் மீண்டும்
அதர்ந்து வீறும் நாள்வரும் !
குடிகள் அழுத கண்ணீர் அவர்க்குக்
கொடுமை வீழ்த்தும் வாள்தரும் !

ஆசிரியர்
பெருஞ்சித்திரனர்

சுவடி : 23
ஓலை : 10
விலை
உருபா: 1-75

நமக்கு வந்த தொடர். மடல்கள்.

(24.5.1987-ஆம் நாள் கோலாலம்பூருக்குப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் வந்த பொழுது பாடியளித்த வாழ்த்து மடல் !)

○ : *1246* : தமிழ் அடலேறே ! பாவலரேறே !
தமிழின நெஞ்சத் திருத் தேரே !
தமிழ் மொழியின் மணிச் சுடரே !
மண்ணகத்து மாத் தமிழின் மாக்கடலே !
செந்திரு நாவில் சிரித்திடும் செந்தமிழ்ச்சீரே !
வள்ளுவத்தின் வழி காணும் வள்ளலாரே !
வான் புகழ் வள்ளுவத்தின் வழித்தோன்றலே !
தமிழ் காக்கும் அரிமாத் திருவே !
இன எழுச்சியின் எழு ஞாயிறே !
இன நலமும் மொழி நலமும் காக்க வந்த இனிய-
கற்பகக் கனியே !

பொய்ம்மை போக்கி மெய்ம்மை பொழியும் அறிவே !
திருக்குறளுக்குத்திருப்பணியாற்றும் அறிவுக் கரசே !
தமிழ் அரசைத் தன் நெஞ்சத்தரசாய்க் கொள்ளும்
பேரரசே !
பாரில் தமிழரின் வீழ்ச்சியையும் தாழ்ச்சியையும்
தகர்த்துஎறிய வந்த பகலவனே !
முத்தமிழை முழு மூச்சாய் முழங்கும் முடியரசே !
தமிழை ஆரிய இருள் கவ்வியிருப்பதைக் களைய வந்த
செம்பரிதியே !

ஆரியத்தை வீழ்த்த வந்த வைரத்தின் போர்வாளே!
இன்பத்தமிழின் இரு விழியே !
தமிழருக்குத் தன்னுணர்வு ஊட்ட வந்த தங்கமே !
தமிழைப்பீடித்திருக்கும் தூய்மைக்கேட்டைக்
கொளுத்த வந்த குலக்கொழுந்தே!

ஆரியக் கொடிய நஞ்சை அகற்ற வந்த
ஆற்றல் மறவரே !
உன்னுருவில் என் நெஞ்சத்தில் வள்ளுவனைக்
காண்கின்றேனே !
தமிழ்க்குடிக்குத் தன்னையே ஈகம் தந்த
பாவலர் திருவே !

மாண்ட பெருமைகள் மீண்டும் மறுமலர்ச்சி
யடைவிக்க வந்த பெரும் பேறே !

உன் பணி இனி என் பணி என்று தமிழ்ப்
பணியாக்கிவிட்ட நீவிர் நீரும் நிலமும் காரும்
உள்ளளவும் நீடு வாழ்க !

வள்ளுவனே வருக ! வண்டமிழே வருக !
தண்டமிழே வருக !

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம் பார்க்க)

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]

தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனீயப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்
ஆசிரியர்:மா.பூங்குன்றன்.க.மு.
புரப்பாளர்கள்: தென்மொழி முல்லைவாணன், தென்மொழி ந. முத்துக்குமரனார், தென்மொழி ப. துரையரசன், தென்மொழி நா. இளமாறன், தென்மொழி பழநி-மகிழ்நன், தென்மொழி எசுஆர். பிரான்சிசு, தென்மொழி கா.இளமுருகன், தென்மொழி த. தானியேல் செபராசு, தென்மொழி அரசத் தொகையன், தென்மொழி கதிர் மதியன்,தென்மொழி இரா. பாலகங்காதரன் பாவலர். சா. சி. சுப்பையா, பாவலர். அ. பு. திருமாலனார், தென்மொழி த. அரிமா வளங்கோ; பொன். பாலகிருட்டிணன். பாச்சுடர். புலவர். இரா. வடிவேலனார். க. மு, கல், இ. மருத்துவர். சி. இராமச்சந்திரனார். (தொலைபேசி : 847829

சுவடி 23] உ0கஅ கன்னி-துலை (செப்-அக்.'87) [ஓலை 10

அறிவியல் தமிழ் !

(இக் கட்டுரை, அண்மையில், அண்ணா பல்கலைக் கழகத் துணை வேந்தர் பா. வா செ. குழந்தைசாமி அவர்கள் எழுதி வெளியிட்டிருக்கும் அறிவியல் தமிழ் என்னும் நூலின் அடிப்படையில் எழுந்த சில கருத்துரைகளையும் விளக்கங்களையும் உள்ளடக்கியதாகும். இதை அந்நூலின் நெடிய திறனாய்வு மதிப்புரை என்றே கருதலாம்.)

இவ் விருபதாம் நூற்றுண்டின் பிற்பகுதியிலிருந்து தூய தமிழ்—தனித்தமிழ்—நன்கு வளர்ச்சி பெற்று வருவது, எதிர் காலத் தமிழ் வளமைக்கும் வளர்ச்சிக்குமே ஓர் அடிப்படை ஊற் றமாகும்.

'தனித்தமிழும் ஒரு தமிழா, அஃது ஒரு செயற்கை முயற்சி, அஃது ஒரு பிள்ளை விளையாட்டு' என்றும், 'மறைமலையடிகள் என் பதை 'மரஞ்செடிகொடிகள்' என்றும் பகடிக்கூத்து நிகழ்த்திய வர்கள் எல்லாரும், வாய்மேல் விரல் வைத்து நாவடங்குமாறும், மனம் வெதும்புமாறும், தூயதமிழ் வளர்ச்சி நாள்தோறும் இடந் தோறும் பல்கிப் பெருகி வருகிறது.

தொடக்கத்தில் தனித்தமிழ் என்றே வழக்கத்தும் புழக்கத் தும் கூறிவந்த நாம், அஃது ஒரு வேறும் தமிழ் என்று எண்ணும் மனவுணர்வு வந்துவிடக் கூடாது, வளர்ந்துவிடக் கூடாது என் பதற்காகவே, தூயதமிழ் என்று சொல்மாற்றி வழங்க நேரிட் டது. அம் முயற்சியின் விளைவாக இக்கால் எங்கும் தமிழ், எதி லும் தமிழ் என்னும் வாயளவு முழக்கம் கூட, எங்கும் தூயதமிழ், எதிலும் தூயதமிழ் என்னும் அளவில் விரிந்தோங்கி விளைவு பெற்று வருகிறது.

'அரசன் முத்தினல் அரம்பை' என்னும் பழமொழிக்கு ஏற்ப, தூயதமிழ்ச் சொல்லாக்கத்தை, அரசே கைக்கொண்டு, நாம் தொடக்கத்தில் பயன்படுத்திய பற்பல சொற்களை, வழக்கத்திற் கும் கொணர்ந்து, நாட்டிலும், வீட்டிலும் நல்ல தமிழ் வழங்க வாய்ப்புகளை உருவாக்கி வருகின்றது. அரசின் ஆட்சி வழக்கில் நல்ல தமிழ் வழக்குகள் வேரூன்றி வருவது, மிகவும் பாராட்டி வரவேற்கத்தக்கது.

மக்கள் நலத்துறை, பொதுப்பணித்துறை, ஊரக வளர்ச்சித் துறை, போக்குவரத்துத்துறை, வேளாண்மைத் துறை, உள் ளாட்சித்துறை, பாடநூல் வெளியீட்டுத்துறை, கல்வித்துறை, அறத்துறை, ஆட்சித்துறை முதலிய துறைகளிலெல்லாம் அங் கங்கே, படிப்படியாக, ஓரளவு தூயதமிழ்ச் சொற்கள் வருவதைப் பார்த்து ஒருவகைப் பெருமிதமே கொள்ள வேண்டியுள்ளது.

தமிழ் வளர்ச்சிக்கென்றும், தமிழ்ப்பண்பாட்டு வளர்ச்சிக்கென் றும், மொழியாக்கத்திற்கென்றும், அகராதிக் கென்றும், எழுது பொருள், அச்சீட்டுக்கென்றும் தனித்தனித் துறைகளை உருவாக் கியதுடன், அனைத்துக்கும் மேலாகத் தமிழுக்கென்றே ஒரு பல்கலைக் கழகமே தோன்றி, நல்ல தமிழ் நாள்தோறும் பரவ வழிகள் வகுக்கப்பெற்றிருப்பதும் மகிழத்தக்கன; மகிழ்ந்து பாராட்டத் தக்கனவாகும்.

இவற்றுடன் நில்லாமல், தமிழை அறிவியல் முறையில் வளர்க்கவும் நன்கு எண்ணப் பெற்று, ஆக்கச் சிந்தனைகளும் தோன்றிக், கருத்துகள் வெளிப்படவும் தொடங்கியுள்ளது. இந்

நிலை பெரிதும் வரவேற்கத்தகுந்த, காலத்தையும் வாழ்க்கை முன்னேற்றங்களையும் ஒட்டிய புதிய, தேவையான முயற்சிகளாகும். ஆனாலும், அறிவியலைப் பொதுவான வாழ்க்கையிலும், பிறகு அதற்குத்தக மொழி, இலக்கிய நிலைகளிலும் பின்பற்றுவதை வலியுறுத்துமுன் அல்லது நடைமுறைப் படுத்துமுன், அறிவியலைப் பற்றிய பொதுவான, சிறப்பான சில கருத்துகளையும் நாம் எண்ணித் தெளிவடைதல் நல்லது.

அறிவியலை மிகச் சிறப்பான முறையில் நாம் மதிப்பிடும் முன், அதிலும் அறியாமை, மூடநம்பிக்கை, முரட்டுத்தன்மைகள் ஆகியவையும் உண்டு என்பதைக் கருதுதல் வேண்டும்.

முதலில், அறிவியல் படித்துவிட்டதாலேயே, அதைப்படியாத பிறர் அனைவரும் ஒன்றுமே அறியாதவர்கள், வாழத் தகுதியற்றவர்கள் என்று நினைப்பது அறியாமை.

அறிவியல் தெரிந்தவுடன், பிற வாழ்வியல் நுணுக்கங்கள் ஒன்றுமே நமக்குத் தெரியவேண்டுவதில்லை என்று நினைத்துக் கொள்வது ஒருவகை மூடநம்பிக்கை.

நமக்குத் தெரிந்த உண்மைகளையே முழுச்சரியானவை என்று நினைப்பதும், அவற்றையே, நமக்கு வல்லமை வாய்ப்புண்டு என்னும் காரணத்தால், அல்லது அதிகாரத்தால், அனைவர்க்கும் பொதுவான கொள்கையாகத் திணிக்க விரும்புவதும், அல்லது திணிக்கச் செய்வதும் முரட்டுத்தனம்.

வாழ்வியல், மனவியல், உடலியல், பொது அறிவியல், அறிவியல், குமுகவியல், அரசியல், சிறப்பு அறிவியல், தொழிலியல்— முதலிய அனைத்துக் கூறுகளும் அதனதன் விழுக்காட்டுப்படி சேர்ந்து இயங்குவதே வாழ்க்கை.

இவை ஒவ்வொன்றிலும் பொதுத்தன்மைகளும் உண்டு; சிறப்புத் தன்மைகளும் உண்டு. இவை அனைத்தையும் அனைவரும் தெரிந்துகொள்ள விரும்புவதில், அல்லது முயன்று தெரிந்து கொள்வதில் தவறில்லை. ஆனால் தெரிந்து கொள்ளத்தான் வேண்டும் என்பது மிகத்தவறு; மூடத்தன்மையானது. வான்வெளியில் செல்பவனுக்கு உணவுகள் குளிகை முறையில் கொடுக்கப்பட வேண்டும் என்பது உண்மையான நடைமுறை; ஆனால், உணவைக் குளிகை முறையாக்குவதே அறிவியல் முன்னேற்றமானது என்று கூறி, மக்கள் அனைவருமே அக்குளிகை முறை உணவைத் தான் உண்ண வேண்டும், உண்ணச் செய்தால் என்ன—என்றெல்லாம் சிந்திப்பது மூடத்தனம் ஆகாதா?

நமக்குத் தேவையான நெல், பருப்பு, வெங்காயம், சருக்கரைப்பயிர், புளி — முதலிய அனைத்து உணவுப் பொருள்களையும் அவரவர் வயலிலேயே விளைவித்துக் கொள்ள வேண்டும், அது தான் நல்லது, சிக்கனமானது என்று ஒருவன் சிந்திப்பானானால் அவனைப் பித்துப்பிடித்தவன் என்றுதான் சொல்ல வேண்டும்.

அவனவனும் அவனவனல் இயன்ற உணவுப்பொருள்களைப் பயிரிடலாம். இயலாதவற்றைப் பயிரிட்ட வேறு ஒருவனிடம் பகிர்ந்து பரிமாறிக் கொள்ளலாம். அதில் என்ன தவறிருக்க முடியும் ?

மொழிநிலையிலும் நாம் இப்படித்தான் சிந்திக்க வேண்டும். நம் அறிவியல் சிந்தனை வாழ்வியல் சிந்தனைகளை மழுக்கி விடவோ, அழித்துவிடவோ கூடாது.

முதலில், வெறும் மொழி என்பதில் அறிவிருக்க முடியாது. மொழியைப் பயில்பவர்களிடத்தில், எழுதுபவர்களிடத்தில்தான் அறிவு இருக்க வேண்டும்; அல்லது அறிவு வளரவேண்டும். அந்த அறிவு அவரவர்களின் மொழியில் தேக்கி வைக்கப்பட வேண்டும். உலகில் உள்ள அனைத்து மொழிகளிலும், மக்களுக்கு வேண்டிய அனைத்துக் கூறுகளும் அடங்கிக் கிடப்பதாகக் கூறி விட முடியாது.

கையிலுள்ள வாளால் போரிடத் தெரியாதவன், வாள்மேல் குறைபட்டுக் கொண்டு, தன் கைக்கு வரும் வாள்களையெல்லாம் மாற்றி மாற்றி ஆராய்வதிலேயே காலத்தைக் கடத்தி விட முடியாது. நல்லவாள் என்று மதிப்பிடப் பெறுவது, அதைப் பயன் படுத்துபவனையும் பொறுத்தே !

ஒரு மொழிவெளிப்பாட்டில்—வெறும் மொழிச்சிறப்பு மட்டும் இல்லை. வாழ்வியல், மனவியல், அறிவியல், போன்ற அத்தனைக் கூறுகளும் இருக்கலாம் ; அல்லது இல்லாமற் போகலாம். அதற்காக மொழிக்கண்ணோட்டம் ஒன்றையே கொண்டு, அந்த மொழிமக்கள் நலன்களை எடையிடத் தொடங்கினல், அவ்வினமே இல்லாமற் போகலாம்.

அறிவியல் படிப்பவர்கள் எந்த மொழியிலும் கற்கலாம் ; அல்லது கற்பிக்கலாம். தேவை, அறிவே தவிர இன்னமொழியில் தான் கற்கவேண்டும் அல்லது கற்பிக்க வேண்டும் என்பது தொடர்ந்த கொள்கையாக இருக்கக் கூடாது. அதனல்தான் கற்க வேண்டிய அல்லது கற்க விரும்பிய அறிவெல்லாவற்றையும், தன் மொழியிலேயே படித்துவிட வேண்டும் என்றும், அந்த அறிவியல் கோட்பாடுகளையெல்லாம் தன் மொழியிலேயே புகுத்திவிட வேண்டும் என்றும் கருதுவது எப்படிச் சரியாகும்? நமக்கு வேண்டுவதை அஃது இருப்பதன் வழியாகப் பெற்றுக் கொள்வதே முறை. தேவையானல் அந்த அறிவை நம் மொழியின் வழியாகக் கொண்டு வருவதற்கான முயற்சி செய்வதில் தவறில்லை. ஆனல் அதற்காக வேறு வாழ்வியல் கூறுகளுக்கும் பொருந்துவதான ஒரு மொழி, அறிவியல் கூறு ஒன்றே கருதி, அதன் இருப்பைச் சிதைப்பதில், அறிவியல் வேகம் இருப்பதாகக் கருதலாமே தவிர, அறிவியல் (விவேகம்) அறிவு இருப்பதாகக் கருதமுடியாது.

தனக்கு மீசை இருப்பவன் அனைவரையும் மீசை வைத்துக் கொள்ள வேண்டும் என்பதோ, தனக்கு மீசை இல்லாதவன் அனைவரையும் சிரைத்துக் கொள்ள வேண்டும் என்பதோ, அறிவியல், மனவியல், வாழ்வியல் அணுகுமுறை ஆகாது.

தமிழ்மொழி என்பது, மொழிநிலையைப் பொறுத்த மட்டில், ஒரு பழையமொழி, சிறந்தமொழி, வளர்ந்தமொழி, பல மொழிகள் தோன்றுவதற்குக் காரணமான மூலமொழி, நல்ல பல வாழ்வியல் இலக்கியங்களைக் கொண்டமொழி. இவற்றுக்கு மேல் அதில் உலகில் பிறமொழிகளுக்குள்ள அனைத்துத் தகுதிகளையும் புகுத்திவிட வேண்டும் என்று நினைப்பது, அறியாமை, மூடத் தனம், அறிவுச்செருக்கு !

மாம்பழத்திலும், பலாப்பழத்திலும், வாழைப் பழத்திலும் அதற்குரிய சுவைகள், மணங்கள், நலன்கள், பிறகூறுகள் உண்டு. அனைத்திலும் உள்ள மொத்தக் கூறுகளையும் ஒவ்வொன் றிலும் கொண்டுவர வேண்டும் என்று கருதுவது அறிவுடைமை யாகாது. அஃது அறிவுச் செருக்கு அல்லது அறிவுக் கிறுக்கு ! அவ் வாறு செய்வதால் அவை ஒவ்வொன்றின் தனித்தன்மை என்பது தான் என்ன ? அவை எதற்கு ? ஏன் ? என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டுமன்றோ ?

உலகில் பலநாடுகளில் உள்ள உலக வியத்தகு காட்சிப் பொருள்களை — தாசுமகால், குதுப்மினர், பைசா நகரத்துச் சாய்ந்த கோபுரம், மதுரை மீனாட்சி கோயில், காஞ்சி கோயில், திருச்சி மலைக்கோட்டை, குற்றாலம்நீர்வீழ்ச்சி, பாரீசு வெர்சைல்சு அரண்மனை, லீஃபில் கோபுரம், மாசுகோ இலெனின் சவஉடல்— அனைத்தையும் அனைவரும் பார்க்க எளிதாக விருக்கும்படி, அவற் றைப் பெயர்த்து ஓரிடத்திலேயே வைத்துவிட முடியுமா ? அப் படி ஏன் செய்ய வேண்டும் ? அப்பொழுது ஒவ்வொன்றின் தனித் தன்மைகள், அவற்றின் அடிப்படையில் உள்ள உணர்வுகள் என் னுவது ? மொழி என்பது உணர்ச்சியே தழுவாத ஒருவகைப் பிண் டமா ?

ஒருவர் சிறந்த அறிவியல் அறிஞர் என்பதால், அனைவரும் அவரைப் போலவே ஆகிவிட வேண்டுமா ? அது முடியுமா ? அல் லது காந்தியடிகள்தாம் சிறந்த தலைவர் அல்லது வழிகாட்டி என் பதால், அனைவரையும் அவரைப்போல் ஆக்கிவிட முயற்சி செய்ய வேண்டுமா ? இஃதென்ன மூடத்தனம் ?

தமிழ் எல்லாராலும் கற்கப்பட வேண்டும் என்று விரும்பி னுல் — அதன் தனித்தன்மையான நிலைகளிலேயே அதைக் கற்க வேண்டுமே தவிர, கற்க விரும்புகின்றவர்களுக் கெல்லாம் ஏற்ற வாறு அதை உருவம் பிடிக்க, அஃது என்ன களிமண்ணு ?

அறிவியல் என்பது பிற வாழ்வியல் கூறுகளைப் போலவே, ஒன்று; அதுவே வாழ்வியலுக்கான அனைத்தும் ஆக விடாது; அது வும் வாழ்வியலுக்குத் தேவை; அல்லது பெரும்பான்மையும் தேவையாகக் கூட இருக்கலாம்; அதற்காக அதுவாகவே அனைத்துக் கூறுகளையும் ஆக்க வேண்டுமா ? அவ்வாறுனுல், மாந் தன் என்பவன் வெறும் ஒரு பொறியாக மட்டுந்தான் இயங்க முடி யும். அக்கால் அவன் மனவியலுக்கும், உணர்வியலுக்கும்தான்

என்ன பொருள்? என்ன தேவை? எதற்காக உணர்வைச் சிதைத்து உருவத்தை மட்டுமே போற்றுதல் வேண்டும். இதுதான் அறிவியலின் பயனு?

நாட்டின் நில ஓரங்களெல்லாம் ஒரே ஒழுங்காக இல்லை என்பதற்காகக் கடற்கரைகளையெல்லாம் அடிக்கோல் வைத்துச் செதுக்கிவிட வேண்டும் என்பது போல்,

அனைத்துக் காய்கறிகளிலும் மக்களுக்குத் தேவையான அனைத்துச் சாரங்களும் (ஏ, பி, சி, டி—போல்) இல்லை என்பதால், அனைத்துக் காய்கறிகளிலும் ஒரே சுவை, குணம், பயன்களை வருவிக்க வேண்டும் என்பது போல்,

—மொழி, எழுத்துகளைச் சீர்திருத்தப் புறப்பட்டுள்ளனர் அறிவியலுணர்வு மேலோங்கி நிற்கும் பூதவியலாளர்கள் சிலர்.

வேற்றுமையில் ஒற்றுமை என்பதே இயற்கைக் கோட்பாடு என்பது யாவரும் அறிந்ததே! எனவே எல்லா மொழிகளிலும் எல்லாத் தன்மைகளும் இருந்துவிட முடியாது. இருந்துவிடவும் கூடாது.

'ஒவ்வொன்றும் தனித்தனி; அதே பொழுது அனைத்தும் ஒன்று!' —இதுவே மெய்யறிவியல் கோட்பாடு. இதன் பருப்பொருள் உண்மைதான் அறிவியல்! அதன் கோட்டு ஓவியந்தான் மொழி! அதன் வண்ண விளக்கந்தான் இலக்கியம்! அதன் அசையாப் படங்கள்தாம் இயற்கை! அதன் அசையும் படங்கள் தாம் வாழ்க்கை! அதன் சூடும் குளிர்ச்சியும்தாம் மனவியல்! இவ்வாறு ஒன்றினுள் ஒன்றை விளங்கிக் கொள்ள முடியாமல், ஒவ்வொன்றையும் தனித்தனி என்றே வழக்காடுவதும், ஒன்றே என்று தருக்கமிடுவதும் முழுவுண்மையைக் கண்டதாகி விடாது.

—(தொடரும்)

தனித்தமிழோடு உயர்வோம்!

உலகமெலாம் வாழுகின்ற தமிழி னத்தின்,
ஒளி படைத்த வாழ்விற்கே குரலெ ழுப்பும்,
கலகமெதும் விளைக்காத உண்மையான
கற்கண்டுக் கொள்கைகளாம் ஏழு கொண்ட
''உலகத்தமிழ் இனமுயர்த்தும் கழகம்'' என்னும்,
ஒப்பரிய உழைப்பியக்கம் தோற்று வித்தோன்!
உலகமெலாம சுற்றிவந்து தமிழ்பு ரக்கும்
உயர் அறிஞர் சித்திரனார் இவர் தாம் பாரீர்.

-செ.மீ இரா. தமிழன்பனார், பெராக், மலேசியா.

நேர்பொருதல் இன்றுமுதலே

-வள்ளிகேள்வன்-

1. சிங்களனும் இந்தியனும் செய்தஉடன் பாடுமிகத்
தீமைதரும் பாடு ! தமிழா
சிறுநரிகள் கூடிஉயர் நயன்மையினை நாட்டுவது
தீயின்மிகத் துன்பம் அலவோ?
தங்கையரும் தாயர்களும் தம்பியரும் தந்தஉயிர்
தமிழீழம் மீட்க அலவோ
தளர்நடைகொள் சேய்களையும் காடையர்கள் கூறுபடத்
தாக்கியது நினைவில் இலையோ
மங்குவதும் ஆவினனில் மங்கியதும் இல்லை, அட !
மங்குவதும் இல்லை மானம்!
வரலாற்றில் தமிழீழம் வரையாது வந்ததொரு
வாழ்க்கைநிலை என்றும் துன்பம்!
கங்கைவரை வென்றதமிழ் யாழ்நகரில் பொங்கியது
கட்டிவிட வந்த பகையைக்
கட்டியிழுக் கின்றவரை ஒய்வதிலை என்றெழுக !
கன்னித்தமிழ் மாந்தர் இனமே !

2. பெண்மையது மாசுபடப் பேயினத்துச் சிங்களர்கள்
பெய்தசெயல் பார்த்து நின்றோம்!
பெருமறவர் கண்களதை வெறிகிளர ஈர்ந்தவர்கள்
பெயர்த்தெறியும் கொடுமை கண்டோம்!
தம்முயிரும் தூசுஎன நஞ்சுதனை உண்டுயிரைத்
தானீந்த ஈகம் அடடா !
தமிழீழம் காணுமல் சிங்களரின் அடிமையெனத்
தளர்ந்துமிக நலிந்து விடவா ?
வெம்மையையும் தண்மையையும் வேருக எண்ணுமல்
வெஞ்சமரில் ஆடும் பொழுது
வெட்டமுடி யாச்சிறகைக் கட்டிவிட வேண்டுமெனும்
வடவர்உடன் பாடு கொடிது!
நம்முயிரை நம்முணர்வை நம்முடைய வாழ்வுதனை
நரிகள்அளக் கின்ற நிலையா ?
நங்கள்இறை யாண்மையதை ஈழமதில் நாட்டஎழு !
நற்றமிழ மாந்தர் இனமே.

3. இந்திமொழி ஊன்றுபவர் இன்றமிழர் மேன்மையினை
என்னும்விழை கின்ற திலையே!
ஈழநிலம் மீட்பதென ஈகம்செயும் தமிழ்ப்புலிகள்
ஏற்றமதை ஒப்ப விலையே!
தந்திரமும் மந்திரமும் தங்களவர் சிங்களவர்
தகவுக்கு வைத்த நிலையே!
தமிழ்நிலத்தில் குடியேறும் சிங்களவரை அழிம்புதனைத்
தடுக்க அவர் முனைய விலையே!

எந்தஉடன் பாடெனினும் ஆரியரின் மேன்மையெனல்
தில்லிஅர சாட்சி நெறியே!
இந்தமுறை ஒப்புவதும் இல்லையினி நேர்பொருதல்
இன்றுமுதல் இன்று முதலே,
சொந்தநிலம் மீட்பதெனும் நோக்கில்அமர் ஆடுபவர்
தோற்கும்வர லாறும் இலையே;
தூயமனம் உள்ளவரை வெற்றிநம தென்றெழுக,
தொல்புகழ்கொள் தமிழர் இனமே.

தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் சலுகை விலை விற்பனை!

வரும் ஆண்டுப் பொங்கல் விழாவை முன்னிட்டு, இருப்பில் உள்ள தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் இதழ்களைச் சலுகை விலையில் விற்பனை செய்யத் தீர்மானித்துக் கீழ்க்காணும் முடிவுகளை அறிவிக்கிறோம்.

அண்மையில் உறுப்பினர் ஆன அன்பர்கள், இனிமேல் உறுப்பினர் ஆக விரும்புகிறவர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் படிப்பக உரிமையாளர்கள், வேறு இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் அனைவரும்—இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுகிறோம்.

நீங்கள் செய்ய வேண்டுவது, தென்மொழிக்கு ஓராண்டுக்குப் புதிய உறுப்பாண்மைக் கட்டணம் உரு 20. ஐ-அனுப்புவதோடு,—

தென்மொழி பழைய (சுவடி 4 முதல், சுவடி 10 முடிய) சுவடிகளின் 50 இதழ்கள், அனுப்புச்செலவும் சேர்த்து, உரு 15—மட்டுமே அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

அதேபோல், தமிழ்ச்சிட்டுக்கும் ஓராண்டுப் புதிய உறுப்பாண்மைக் கட்டணம் உரு 9— அனுப்புவதோடு,—

தமிழ்ச்சிட்டு பழைய (குரல் 2 முதல், குரல் 10 முடிய உள்ள இதழ்களில்) 50 இதழ்களை, அனுப்புச்செலவும் சேர்த்து உரு 7.50- மட்டுமே அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

தமிழ்நிலம் பழைய படிகளின் சலுகை விற்பனை விலை பின்னர் அறிவிக்கப் பெறும்.

—அமைச்சர்.

தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் தேவைதானா?

முதறிஞர் வ. சுப. மாணிக்கனார்.
தலைவர், தமிழ்வழிக் கல்வியியக்கம்.
முன்னைத் துணைவேந்தர், மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

தமிழெழுத்துச் சீர்திருத்தம் தேவை தானா? அது தமிழுக்குத் தான் தேவையா? ஏனை இந்திய மொழிகட்கும் ஆங்கிலம், பிரெஞ்சு முதலான மொழிகட்கும் தேவை யில்லையா? அவற்றுக்குத் தேவை அவ்வளவு இல்லை எனவும், தமிழுக்குத் தான் கூடுதலான உடனடித் தேவை எனவும் சொல்லலாமா? இந்த எழுத்துச் சீர்திருத்தம் இல்லாமை யாற்றான் மழலைப் பள்ளி முதல் பல்கலைக் கழகம் வரை தமிழ் பயிற்று மொழியாக வில்லையா? இதனைச் செய்து விட்டால், எல்லாத் துறைகளையும் ஆங்கிலம் போல் சொல்லும் ஆற்றலைத் தமிழ் எய்தி விடுமா? இவை நம் சிந்தனைக் குரிய வினாக்கள்.

அறிவியல் அணுகுமுறை?

தமிழெழுத்துச் சீர்திருத்தம் பற்றிச் சில நூற்களும் பல கட்டுரைகளும் வந்து கொண்டிருக்கின்றன. நல்லன்பர்கள் இச்சீர்மையிற் பேரார்வம் காட்டுகின்றனர். அண்மையில் தினமணி ஆசிரியர் 'தமிழ் எழுத்துகளின் சீர்திருத்தம்' என்பது குறித்து நீண்ட கட்டுரை எழுதியதையும், வாசகர்களின் கருத்தினை வரவேற்பதையும் காண்கின்றோம். தமிழுக்கு எழுத்துச் சீர்திருத்தம் என்பது தமிழ் மொழித் தொண்டு, மக்கள் தொண்டு, அறிவியல் தொண்டு, அடிப் படைத் தொண்டு என்றெல்லாம் கொள்கைகள் பறையறையப் படுகின்றன. மொழிக்கு மரபியல் அணுகுமுறையே முகாமை என்பதை உணராமல், அறிவியல் அணுகுமுறை என்ற ஒரு மாயப் பார்வையை எழுத்துத் திருத்திகள் புகுத்துகின்றனர். அறிந்தோ அறியாமலோ அன்பினாலோ வன்பினாலோ தமிழுக்குப் புதை குழியும் சிதை குழியும் பறிக்கும் இம் மருட்சிப் போக்கினைத் தமிழினம் உணர்ந்து கொள்ள வேண்டும். எளிமை வளர்ச்சி அறிவியல் முற்போக்கு என்ற பகட்டுரையில் தமிழினம் தமிழ்ச் செவிடாகி விடக் கூடாது. எழுத்துக் குருடாகி விடக் கூடாது. விழிப்போடு தமிழினைக் காத்து நிலைபெறுத்தி நெறியாக வளர்க்க வேண்டிய காலம் இது. தமிழினத்தின் அழிவுக்கு இடங்கொடுத்தல் அன்பன்று, அறமன்று, ஆக்கமும் அன்று.

தமிழ் திருந்தா மொழியா?

'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்; உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை' என்றார் பாரதியார். 'சொல்லவுங் கூடுவதில்லை, சொல்லுந் திறமை தமிழ் மொழிக்கில்லை' என்று பொய்ப்பழி கூறுவாரையும் மடமைப்படுத்

திஞர். இப்போது எழுதவுங் கூடுவதில்லை, எழுதுந்திறமைகூடத் தமிழ்மொழிக் கில்லை என்ற ஓர் இழிவைத்தான், மொழியுலகிலும் இந்தியாவிலும் ஆங்கிலப் பற்று மிக்க பெற்ரோர் - குழந்தைகளின் உள்ளத்திலும், இந்த எழுத்துச் சீர்திருத்தம் இழிவாகப் பரப்பிக் கொண்டிருக்கிறது. சில தமிழ் எழுத்துத் திருத்திகளின் முனைப்புக் கூறுகளைக் காணுங்கால், தமிழ் இதுவரை எழுத்து வடிவே இல்லாத வெறும் பேச்சுமொழி போலவும், காலத்திற்கும் அறிவியலுக்கும் ஏற்பப் புது வரி வடிவங்களை இவர்கள் படைக்க வேண்டிய குறைமொழி போலவும், இப் படைப்பு வடிவங்கள் இல்லாவிட்டால் தமிழ் செத்தமொழி யாகிவிடும் என்பது போலவும் அமர்க்களம் செய்வதாகப் படுகின்றது.

கொள்கைக் கோணல்கள் :

எழுத்துத் திருத்திகளுக்கு ஆங்கில 26 எழுத்துகளே வேதக் கோல், உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் போதும்; கு கா கி கீ முதலான உயிர்மெய் எழுத்துகளே வேண்டியதில்லை எனவும், உயிர்மெய் எழுத்தில்லாமல் ஆங்கிலமொழி வளரவில்லையா எனவும், 247 தமிழெழுத்துகளை (இது பொய்க் கணக்கு) 28 எழுத்துகளாகக் குறைக்கலாம் எனவும் சொல்கின்றனர். தமிழிசையியக்கம் கிளர்ந்தெழுந்த போது, இசை முகாமையே யன்றி இசைக்கு மொழி முகாமை இல்லை என்று சிலர் வழக்கிட்டது போலவே, மொழிக்கு ஒலி முகாமையே யன்றி எழுத்து வரிவடிவு முகாமையில்லை; தமிழ் எழுத்தே வேண்டியதில்லை; தமிழ் ஒலிகளை உரோமன் எழுத்துகளிலேயே எழுதிவிடலாம் எனவும், தமிழ்க் குழந்தைகள் எல்லாம் இப்போது ஆங்கிலம் படிப்பதால் தமிழெழுத்து மிகை எனவும், உரோமன் எழுத்தாக ஆகி விட்டால், அயல் நாட்டவர்களும் எளிமையாகத் தமிழைப் படிப்பார்கள் எனவும், அறிவுறுத்தும் எழுத்துத் திருத்திகளும் உளர். இந்தியாவுக்குப் பொதுவான தேவநாகரியைத் தமிழ் ஏற்றுக் கொண்டால், ஒருமைப்பாடு சிறக்கும் என்ற கருத்தும் சிலர்க்கு உண்டு. இவர்கள் சொற்படி இவற்றைப் புரட்சி மனப்பான்மையோடு ஏற்றுக் கொண்டு விட்டால், தமிழ் மொழியின் எழுத்துச் சீர்திருத்தம் என்ற பணிக்கே இடமில்லாமற் போய் விடுமல்லவா? நம் உயிர்கூட எந்த உடல் வடிவில் நமக்கு இருந்தால் என்ன? தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றிப் பல கோணற் கொள்கைகள் உள; ஆதலின் பொதுவாகப் படிப்பவர்கட்கு இச் சில குறிப்புகளையாவது நினைவு படுத்த விரும்பினேன். இவ்வாறு ஒருபுறம் இருப்ப, ஆங்கிலத்தை எளிமையாகக் கற்றுத் தருவதற்குச் சில இதழ்கள் தமிழ் எழுத்துகளைப் பயன் படுத்துகின்றன என்ற ஏற்றத்தையும் உணருங்கள்.

திணிக்கும் வடிவங்கள் :

பலர் வடித்துப் படைக்கும் தமிழ் எழுத்துச் சிதைவுகளில் சிலவற்றை யேனும் ஓரளவு உங்கள் கண்ணுற் பார்த்துக் கொள்ளுங்கள்;

ம உ ர உ க அ ன — முருகன்
வ அ ந த ஆ ன — வந்தான்
அ l ல · ல ய · — இல்லை
இ ட l க · க ட l — அடிக்கடி
அ ○ ர ¬ — ஒரு
ச அ அ ட இ — சாடி
ச எ எ ட இ — சேடி
எ ா ட ¬ — ஏடு
த அ ம இ ழ — தமிழ்
அ ா க ¬ ம் — ஆகும்
அ p ன · ற ¬ — என்று
அ ¬ ண · ம ய · ய l ல p ய p — உண்மையிலேயே
ந ூ ற ா ண் ட ¬ க ள ¬ க் க ¬ — நூறாண்டுகளுக்கு
க ெ ட ¬ — கெடு
க ே ட ¬ — கேடு
க ோ ட ¬ — கோடு
அ ா ட — ஆடு
அ ா ண் ட ூ — ஆண்
அ ○ : ட ¬ — ஓடு
அ i ட ¬ — ஈடு
அ p · ட ¬ — ஏடு
பி ழ ய் — பிழை
வ ா ழ ய் — வாழை
ே ச ல ய் — சேலை

புதிய உயிரெழுத்து வடிவங்கள் :

அ இா, உா, எா, ஒா — ஆ, ஈ, ஊ, ஏ, ஓ

அ அா அl அl· அ¬ அ¬· அp அp· அ○ அ○· அய அவ
(அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஒ ஓ ஐ ஔ)

முற்றும் புரட்சியான வடிவுத்திரிபுகளை இச்சிறு கட்டுரையில் மேலும் எழுத விரும்பவில்லை.

சீர்மை உண்டு :

ஏனை மொழி எழுத்துகளைப் போலத் தமிழெழுத்துகளும் ஓரளவு மாறி வந்த வரலாறு உண்டு. ஆனல் அக் காலத்து எழுத்தெல்லாம் ஒவ்வொருவரும் எழுதும் கையெழுத்துகளே. அச்சுப்பொறி வந்தபின், முந்நூறு ஆண்டுகளாக எழுத்து வடிவுகள் எம்மொழியிலும் ஒரு நிலை பேறு எய்தி விட்டன என்ற வரலாற்றை மறக்கவோ மறைக்கவோ கூடாது. இப்பொழுதுள்ள நடைமுறைத் தமிழெழுத்துகளில் ஒரு சீர்மை இல்லை என்ற பல்வழக்கு உடன்படத் தக்கதன்று. பல மெய்யெழுத்துகளின் முன்பின் வடிவு வேற்றுமைக்கு ஏற்பவும், கைவாகின் எளிமைக்கு இணங்கவும், சீர்மைகள் உள்ளன. சுழியொடு தொடங்கும் ண ல ள ன என்ற மெய்கள் ணை லை ளை னை என்ற ஐ வடிவங்களைப் பெறுகின்

றன ; இறுதிக் கோடுடைய ங ப ய வ என்ற மெய்கள் ஙு பு யு வு என்று கீழ் இழுப்புக்கோடு பெறுகின்றன. கையெழுத்தின் எளிமையையும் இடச் சுருக்கத்தையும் சாலச் சிக்கனத்தையும் மதிக்க வேண்டும் ; வாய் வழக்குப் போலக் கை வழக்கும் இயல்பு வழக்காகும். எத்தனைப் பொறிகள் வரினும் ஒருவர் தம் கையெழுத்தைப் பொறிப் படுத்தல் சான்றுகுமா ? முகம் போல் வேற்றுமையிருத்தலாலன்றோ கையெழுத்துக்குத் தனித் தன்மையுளது. இது மரபியல் அணுகுமுறையாகும்.

ஆங்கில எழுத்துத் திருத்தம் தேவை :

ஒப்புமைக்காக ஒரு சில காண்போம். தமிழை நோக்க, ஆங்கில எழுத்துகளில் என்ன சீர்மையுண்டு? ஆங்கில நெடுங்கணக்கில் உயிரெழுத்துகளும் மெய்யெழுத்துக்களும் கலந்து கிடக்கவில்லையா ? 26 எழுத்து என்பது பெயரளவே தவிர, ஒவ்வோர் எழுத்துக்கும் நால்வகை வடிவு உண்டு. ஓர் எழுத்துக்குப் பல வொலிகளும் ஓர் ஒலிக்குப் பல வெழுத்துகளும் இல்லையா ? p b, t d, k g என்ற ஒத்த ஒலிமெய்கள் இணையாமல் எங்கோ கிடக்கின்றன. I என்பது நான் என்ற பொருளில் முதலிடைகடை எங்கு வந்தாலும் பெரிய எழுத்து வடிவில் எழுதப்பட வேண்டும். இவ்வாறே தெய்வப் பெயர், ஆட் பெயர், ஊர்ப்பெயர், மலைப் பெயர், கடற்பெயர், நூற் பெயர் எனப்பொருட்கேற்ப எழுத்துப் பெரிது வேண்டும். சி ஏ டி-கேட் எனவும் ஆர் ஏ டி-ரேட் எனவும், எம் ஏ டி மேட் எனவும் இங்ஙனம் எழுத்துத் தனியொலி வேருக வும் கூட்டுச் சொல்லொலி முற்றும் வேருகவும் ஏறக்குறைய எல்லா ஆங்கிலச் சொற்கட்கும் செல்ல வில்லையா ? இவை யெல்லாம் குழந்தைகட்கு மிக எளியனவா ? நனி சீர்மையனவா ? மனச் சுமை இல்லாதனவா ?

"The spoken alphabet of English consists of forty five sounds, to represent which we have only twentysix written characters or letters, and of these, these, three viz. c, q and X are redundant. The deficiancy is made uy by making one letter stand for several different sounds and by giving combinations of letters only one sound"

—The Art of Versification - R. F. Brewer.

உலகத்தொண்டு ?

'ஆங்கில மொழிச் சீர்திருத்தம்' என்ற தலைப்பில் எழுதத் தொடங்கினுல் ஒரு பெரு நூல் அளவுக்கு அளவிறந்த குறைபாடுகள் எல்லா நிலையிலும் தோன்றும். சீர்திருத்த முயன்றோர் தோல்வியுற்ற பெருங்கதை நமக்குத் தெரியும். நம் கல்வியுலகில் ஆங்கில மொழிக்குச் செலவழிக்கின்ற காலம் ஒருவரின் வாணுட் காலத்துப் பாதியாகும். அறிவு மேல் வளம் பாராமல், எதனையும் ஆங்கில வழிப் பெறுவதே கல்வி, அறிவு, வாழ்வு, முற்போக்கு என்ற புது வைதீகப் பேதைமையால் நம் குழந்தைகளும், மாண

வர் மாணவியரும். ஆசிரியன்மார்களும் மொழிச் சும்மாடு தவிர உயர்ந்த அறிவுச் சிந்தனைக்கு நெருங்கமுடியவில்லை; பல்லாண்டுக் காலச் செலவு செய்தும் ஆங்கிலச் செம்மை எங்கே? a, an, the, shall, may இவற்றின் தடுமாற்றம் தீர்ந்ததுண்டா? நம் பாராள் மன்றத்தில் shall, may என்ற துணைவினைச் சொற்கள் பட்ட பாட்டை மறக்க முடியாது. கல்வியுலகில் இந்திய மக்களின் வாணாள், குறிப்பாகத் தமிழ் மக்களின் வாணாள் ஆங்கிலப் பயில் மொழியால் வளமும் பண்புமின்றிக் கொன்னே கழிகின்றது. தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் கழறுவோர் ஆங்கில எழுத்துச் சீர் திருத்தம் முதற்கண் செய்வார்களாயின், எல்லாத் தமிழ்க் குழந்தைகட்கும் உலகக் குழந்தைகட்குமே மனச்சுமை குறையும் அல்லவா? உலகத்திற்கே இப் பணி ஒரு பெருந் தொண்டாகும் அல்லவா? பெரும் உலகப் பரிசு கூடத் தமிழர் எதிர்பார்க்கலாம் அல்லவா? அப்போதுதான் எம் மொழிக்கும் மரபியல் அணுகு முறையே முறை என்ற உண்மை இவர்கட்கு விளங்கும் என்பதற் காக இவ்வாறு அங்கதமாகச் சொல்லுகின்றேன்.

மரபியல் அணுகுமுறை :

ஒரு மொழியில் இவையெல்லாம் குறைபாடுகள் என்று காண்பது அணுகுமுறைப் பிழையாகும்; மொழி நலத்துக்கு அறி வியல் அணுகுமுறை பொருந்தாது. மரபியல் அணுகு முறையும் பயிற்சியணுகு முறையுமே மொழியைக் காக்கும். மொழியை வளர்க்கும். ஒரு மொழியின் ஒலி, வடிவு, ஒருமை, பன்மை, வேற் றுமை, காலம், பயனிலை, பால் என்றிக் கூறுகளை வரிக்கோலால் அளந்து பார்த்துச் சிதைப்பதும் செதுக்குவதும் மன்பதைக் குழப் பமாகி விடும்; தொடர்ச்சி துண்டிக்கப் படும். எந்த வரி வடிவும் மக்கள் கையெழுத்துக்கும் வாகாகவும் தெளிவாகவும் சிக்கனமாக வும் இருக்க வேண்டும் என்பதை ஒருகாலும் புறக்கணிக்க முடி யாது.

எதற்கு ஏது ?

மாற்றம் இன்றேல் வளர்ச்சியில்லை என்பது யாரும் அறிந்த இயற்கை. எதற்கு எதனை மாற்ற வேண்டும் என்பதிலேதான் தெளிவும் பகுத்தறிவும் வேண்டும். இருநூறு முந்நூறு ஆண்டுக ளாக ஆங்கிலத்தில் 26 எழுத்துகளுக்கு ஏற்பத்தாம் தட்டச்சு, வரியச்சு, தனியச்சு, கணிப்பான்கள் மாறி வந்துள்ளன; இனியும் மாறும். விரலுக்கு ஏற்ப மோதிரம், காலுக்கு ஏற்பக் காலணி, கண்ணுக்கு ஏற்பக் கண்ணாடி. எதற்கு எது மாறுதல் என்ற வாய் பாட்டை எண்ண வேண்டும். தமிழ் எழுத்துகளுக்கு ஏற்பத்தான் கருவிகளை வயப்படுத்த வேண்டும். வயப்படுத்தும் தொழில் நுட் பத்தில் ஈடுபட வேண்டும். இதுவே தொழில் நுட்ப வினைத் திறப். தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் கூறுநர் தட்டச்சு, வரியச்சு முதலானவை மாறா நிறையுடையன வாகவும், இவ்வச்சுக் கரு விக்குத் தக, தமிழ் எழுத்துகளைத்தாம் குறைக்கவும் சிதைக்கவும் வேண்டும் என்பதாகவும் வழக்கிடுகின்றனர்; கருவித் திருத்தம்

பேசாமல், பொறிக் கருவிகளை நிலையாக எண்ணி மயங்கி, எழுத்துத் திருத்தம் பேசுகின்றனர். தமிழுக்காக அச்சு என்பது போய், அச்சுக்காகத் தமிழைச் சரிப்படுத்தும் அடிமறி நிலையைக் காண்கின்றோம். இவ்வாறு சென்றால், காலந்தோறும் மாறும் தொழில் நுட்ப வேகத்தால் அச்சுப் பொறிகள் மாற மாற, தமிழெழுத்தும் சிதைந்து மாற வேண்டிய அவகதியே ஏற்படும். இவர்கள் ஆங்கிலத்துக்குக் காட்டும் அளவுகோல் உரிமைக் கோலாகும். தமிழுக்குக் காட்டும் அளவு கோலே அச்சுக்கு அடிமைக்கோலாகும். ஆங்கில அளவு கோலுமாகும். எனவே தமிழுக்கு இருவகையடிமை.

பொறித் திருத்தம் :

எதற்கு எது என்ற தெளிவே இன்று தமிழ் நன்மக்கள் அறிய வேண்டிய மரபியல் முறை. தமிழின் எழுத்துக் கேற்ப அச்சுப் பொறிகளைக் கண்டுபிடிப்பதே அன்பான அழகான அறிவியல் முறை. அத்தகைய சீர்ப் பொறிகளைக் காண்பதே நம் அறிவியலாரின் முனைப்பாக இருக்க வேண்டும். பல பத்தாயிரம் ஆண்டுத் தொன்மையுடைய தமிழ் மொழியின் பல்துறை முழு நூற்கள் நெருப்பாலும் நீராலும் புற்றாலும் பூசையாலும் மொழிமாற்றத்தாலும் மடமையாலும் வஞ்சகத்தாலும் அழிந்தொழிந்தன. தமிழுக்கு ஈராயிரம் ஆண்டுகளாக இழப்பு வரலாறே பெரிது. ஆங்கிலக் காதலாலும் அயல் வழக்காலும் இழப்பு இன்று நாளும் கூடி வருகின்றது. இழப்பு வரலாற்றைத் தமிழ் மெய்யன்பர்கள் மறக்க மாட்டார்கள் ; மறவாமல் திட்டமிடுவார்கள்.

இழப்பும் இழிவும் :

ஆங்கில வரலாறு காட்டுவது படி, தமிழ் எழுத்துக் கேற்ப அச்சுப் பொறிகளைக் காணமல், பொறிகட்கு அடிமையாகத் தமிழெழுத்துகளைச் சிதைத்தும் குறைத்தும், உள்ள நல்ல சீரை அழித்தால், இதுவரை காக்கப்பட்ட தமிழ் நூற்களும் பழைய எழுத்தென ஒதுக்கப் பட்டு அழிந்து விடுமோ என அஞ்சுகின்றோம். எழுத்திற்கூடத் தமிழ் செம்மையில்லை என்று தூற்றி இன்று வளரும் தமிழர்களின் ஆங்கிலப் பாசம் பெரு வெள்ளப்படுமோ என்று உணர்கின்றோம். எழுத்திற் கூடத் திருந்தாத மொழி தமிழ் என்று தமிழர்களே சொல்லுகிறார்கள் என உலக மொழி வரலாறு ஏளனஞ் செய்யுமோ என்று நாணுகின்றோம். இன்று கற்றிருக்கும் உலகம் பரவிய நான்குகோடித் தமிழர்கள் முதற்கண் புதுத் தற்குறிகளாக வேண்டிய திருக்குமே என்று கவல்கின்றோம். வருங் காலக் குழந்தைகட்கு வழக்கெழுத்தும் திருத்தெழுத்தும் கூடி, எதனையும் விட முடியாத பெருஞ் சுமையாகி விடுமே என்று இரங்குகின்றோம்.

> முடிவும் இடையூறும் முற்றியாங் கெய்தும்
> படுபயனும் பார்த்துச் செயல்

என்றார் திருவள்ளுவர். 'உள்ளது சிதைப்போர் உளரெனப் படாஅர்' என்பது கழகத் தமிழ்.

தீண்டா மொழியா ?

உள்ள வழக்கெழுத்தை வைத்துக் கொண்டே தமிழில் கலைக் களஞ்சியங்கள், அகராதிகள், அபிதான சிந்தாமணிகள் தோன்றியுள்ளன. மழலைப் பள்ளி முதல் பல்கலைக் கழகம் வரை தமிழ் நாட்டில் தமிழ் பயிற்றுமொழியாகாத நாட்டுக் குறையைத் தவிர, தமிழ் எதனையும் சுருங்கச் சொல்ல வல்ல தன்னுற்றலிற் குறைபாடு உடையதன்று; தமிழைப் பள்ளியும் கல்லூரியும் பல்கலைக் கழகமும் தீண்டா மொழியாக வைத்திருக்கும் நாமே பிறப்பிற் குறையுடையோம்.

கொள்கைப் பதிப்புகள் :

தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் வேண்டும் என்று வலியுறுத்தும் பெருமக்கள் அன்பிலும் அறிவிலும் நோக்கிலும் தாழ்ந்தோரல்லர். ஆங்கிலம் போல் செந்தமிழும் விரைந்து அறிவியற் செல்வங்களைப் பெறல் வேண்டும் என்ற வேணவாக் கொண்டவர்களே யாவர் ; எனினும் அப் பெருமக்களின் அறிவியல் அணுகுமுறையிலும், அச்சுப் பொறிகளை அடிப்படையாக வைத்துக் கொள்ளும் பார்வையிலும், ஆங்கிலத்தை அளவுகோலாகத் தமிழுக்கு நீட்டும் போக்கிலும் நமக்குப் பெருங் கருத்து வேற்றுமையுண்டு; தமிழெழுத்துச் சீர்திருத்தம் என்பது தேவையற்ற, கவைக்குதவாத புல்லிய வீண்வேலை என்ற கருத்து எனக்கு உண்டு ; இருந்தாலும், சீர்திருத்தப் பெருமக்களின் சிந்தனைகளை மதிப்பது நம் பண்பாகும் ஆதலின் முதற்கண் ஒரு வாய்ப்புக் காண்போம்; அப்போதுதான் கொள்கையின் நலந்தீங்குகளைத் தாமே உணரும் வாய்ப்பு அவர்கட்கு உண்டாகும்;

எழுத்துச் சீராளிகள் தாம் கூறும் மாற்றெழுத்து வடிவில் சிற்சில நூற்களையாவது வெளியிடலாம்: குறுந்தொகை, திருக்குறள், சிலப்பதிகாரம், இராமாயணத்தில் ஒரு படலம், திருப்பாவை, திருவெம்பாவை, திரு. வி. க. வின் முருகன் அல்லது அழகு, கலைக் களஞ்சியத்தில் நூறுபக்கம், ஆத்திசூடி, வாக்குண்டாம், உலகநீதி என்பன போலும் சிலவற்றை அவரவர் சுட்டிக் காட்டும் திருத்தெழுத்துகளில் அச்சிடலாம்: இவற்றைக் கையெழுத்திலும் விரைந்து எழுதிப் பார்க்க வேண்டும்; கையெழுத்து அச்செழுத்து என இரு நிலையிலும் ஒத்திட்டு வைத்துப் பார்க்கும் போதுதான் குழப்பமும் தெளிவும் உண்டாகும்; இத் திருத்தெழுத்துகள் இடத்தாலும் வேகத்தாலும் சீர்மையாலும் இணக்கத்தாலும் சிக்கனத்தாலும் எண்ணிய அறிவியற் பயன்களைத் தருகின்றனவா என்று செவ்வனம் சீர்தூக்க முடியும். சில நூற்களையாவது இங்ஙனம் முழுமையளவில் வெளியிடாது தனியெழுத்தளவில் பொது வழக்கிட்டுக் கொண்டிருப்பது நம்பிக்கையும் வலிவையும் தாராது. எழுத்தைத் திருத்துவதா ? அச்சுக் கருவியமைப்பைத் திருத்துவதா ? என்ற வினாக் குறியில் நல்ல முற்றுப் புள்ளி கிடைப்பதற்கு, அவரவரும் தாம் திருத்தும் எழுத்துச் சீர்மையில் சில முழு நூற்களையாவது எழுதி வெளியிட்டுக் காட்டுவது நல்லது.

தமிழின் வளம் :

எழுத்துக் கேற்பப் பொறிக் கருவித் திருத்தந்தான் வேண்டும் எனவும், மரபியல் அணுகுமுறைதான் மொழி முன்னேற்ற வளர்ச்சி நெறி எனவும் என் தெளிவிற்பட்ட எண்ணத்தை இக லின்றிக் கூறும் இக் கட்டுரைக் கண், தொடர்புடைய பிறிதொரு மயக்கத்தைத் தெளிவிக்க விழைகின்றேன். மொழி வயலிலாப்பயி ராகும்? பள்ளிகளும் கல்லூரிகளும் பல்கலைக் கழகங்களுந்தாம் எம் மொழியும் பயிராகி விளையும் களங்கள் என்று உணர்த்த விரும்புகின்றேன்.

ஆங்கிலப் பயில்மொழியாக வேண்டும் என்று இலக்கியப்பெரு மகன் மெக்காலே கொண்டு வந்த காலந்தொட்டே, ஒரு நூற் றுண்டாகத் தமிழில் கலைச் சொல்லாக்கம் வளர்ந்து கொண்டு தான் வந்திருக்கின்றது. இலக்கக்கணக்கான ஆக்கக் கிளவிகள் குவிந்துள்ளன. நூற்களிலும் கட்டுரைகளிலும் பொதிந்துள்ள புதுவளச் சொற்கள் அகராதி பெறவில்லை. அதனால் வளர்ச்சி வெளிப் படையாகத் தெரிந்திலது. தமிழ்ப் பாடநூல் நிறுவனம் 1976 வரை பொறியியல், மருத்துவம் முதலான 19 துறைகளில் 737 நூற்களைப் பட்டப் படிப்புக்குத் தக்கவகையில் தவமலிவு விலையில் வெளியிட்டுள்ளது. புதுச் சொற் பட்டியல் ஒவ்வொரு நூலிலும் உண்டு. தமிழ்ப் பெருஞ்சான்றோர் தி. சு அவிநாசிலிங்கனார் பொறுப்பேற்ற தமிழ் வளர்ச்சிக் கழகம் எல்லாத் துறையும் தழு விய (10 தொகுதிகள் - 7565 பக்கங்கள்) பெரிய கலைக் களஞ் சியங்களை ஓவிய வனப்பாக வழக் கெழுத்தில் வெளியிட்டதோடு, பத்துத் தொகுதி குழந்தைக் கலைக்களஞ்சியங்களையும் புது இந்தி யாவிற்கு வழிகாட்டியாகக் கொண்டு வந்துளது.

பேரறிஞர் சென்னைப் பல்கலைக் கழகத்தின் முன்னைத் துணை வேந்தர் தாமோதரனாரின் கலைச் சொல்லகராதி மூன்று தொகு திகள் இணையில்லாச் சிறப்புடையவை. இருபது துறைக்கு 40000 கலைச் சொற்கள் இத் தொகுதியில் உள. இவை கலைக்கதிர் வெளி யீடாகும். தமிழில் புதிய அறிவியல்களைப் பரப்புவதற்கும் வளர்ப் பதற்கும் என்றே நாற்பது ஆண்டுகட்கு முன் 'கலைக்கதிர்' என்ற தமிழ்க் கதிரிதழைத் தோற்றுவித்த தனிப் பெருந்தகை தாமோ தரனார். அறிவியற்றமிழுக்குக் கலைக் கதிரின் ஒளி அளப்பரியது, ஊற்றம் வற்றாதது.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் பத்துத் தொகுதிப்பட்ட பெருந்தமிழகராதியும், அறிஞர் சிதம்பரனார் செல்வன் பதிப்பித்த ஆங்கிலம்- தமிழ் அகராதியும், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் பல துறையிலும் பல்லாண்டுகட்கு முன்பே தக்க பேராசிரியர்களைக் கொண்டு பதிப்பித்த அறிவியற் பாடநூற்களும், மதுரைப் பல் கலைக் கழகம் அஞ்சல்வழித் துறையிற் பதிப்பித்த சில முதுகலைப் பாட நூற்களும், தமிழ்ப் பல்கலைக் கழகம் தொகுதியாக வெளி யிடும் சங்க விலக்கியக் களஞ்சியம், வாழ்வியற்களஞ்சியம், அறி வியற் களஞ்சியங்களும் பாரபட்டத்தக்க ஆக்கங்களாகும்.

தொகுத்துச் சீர்தூக்கிச் செம்மாந்து பார்த்தால், தனித்தோர் யாத்த அறிவியல் நூற்கள், தனி நிறுவனங்கள் பதிப்பித்த துறை நூற்கள், பல்வேறு இதழ்களில் வந்த அறிவியற் கட்டுரைகள், அபிதான சிந்தாமணிகள், களஞ்சியங்கள், ஆய்வுக் கோவைகள், கருத்தரங்குக் கட்டுரைகள், சுடர்கள் என்றுங்கு அறிவியல் ஆக்கத்தை இமயக்குன்றின் வளர்ச்சி போல் காண்கின்றோம்.

இத்துணை ஆக்கவரலாறு இருந்தும் தமிழ் தகுதியாக வில்லை என்று மேலோர் ஒரு சிலர் சொல்லிக் கொண்டிருப்பது அவர்கள் ஒரு நாளும் தமிழ் பயிற்று மொழியாக வரவிடமாட்டார்கள் என்ற இகலையே காட்டுகின்றது.

தமிழுக்கு வாயில் திறக்கட்டும் :

வளர்ந்து பரந்து ஓங்கிவரும் ஆங்கிலத்துக்கு நெருங்கிய இணையாகத் தமிழாக்கத்தைச் சொல்ல முடியாது என்பது உண்மை தான் ; என்றாலும் தமிழ்மொழி பல்கலைக் கழகம் வரை எல்லாத் துறையிலும் பயிற்று மொழியாவதற்குப் போதுமான ஆக்கச் செல்வம் நம் கையில் இருக்கின்றது. முந்நூற்றுக்கு மேலான அறிஞர்கள் எழுதிய தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் கலைக் களஞ்சியமே பெருஞ்சான்று.

தமிழ் பலதுறையிலும் பல்கலைக் கழகம் வரை பயிற்று மொழியாக வைக்கப் படாமையினுல், இதுவரை ஆக்கிய பல இலக்கம் சொற்கட்குக்கூட வழங்கும் வாய்ப்பில்லையே. உள்ளதற்கே வாய்ப்பில்லாத போது, மேல் வளர்ச்சி எங்கே வரும்? ய வளர வேண்டுமேல், எதுவும் வளர வேண்டுமேல் பயில வா வழங்க வேண்டும் என்பது இயற்கை நெறி. ஆங்கிலம் தானே வளர்ந்து விட்டதா? அதற்குப் பெரிய வாய்ப்பை இந்தியா இன்னும் வழங்கிக் கொண்டிருக்கின்றது. தமிழ் முழுப் பயிற்று மொழியாதற்குச் சொல்லாக்கம் போதும். தமிழுக்கு இப்போது வேண்டுவது பயில் வாய்ப்பாக்கமே. சொற்களைக் கற்பிக்கும் வாய்ப்பு இருந்தாற்றான் ஆசிரியர்கட்குப் பயிற்சித் திறம் பிறங்கி வரும். பயிற்சி பெருகப் பெருக அறிவியற்றமிழ் எளிமைப்படும். நயப்படும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும் பயிற்று மொழியாகத் தமிழை நுழைய விட்டால்—இவற்றின் கதவுகள் தமிழ்க் கன்னிக்குத் திறந்து விடப்பட்டால்—எண்ணிறந்த அறிவுத் துறைக் குழந்தைகள் ஆங்கிலம் போல வளரும்; தழைக்கும், செழிக்கும். இயற்கையான மக்களைத் தீண்டத்தகாதோர் என்று கோயிலுக்குள் நுழைய விடாது தடுத்த மேலோர் கொடுமைச் சட்டத்தால் ஒழிக்கப் பட்டதுபோல, உலகத் தமிழ் மாநாடுகள் கண்டு வரும் இயற்கைத் தமிழ்மொழியைப் பள்ளிக்குள் பயிற்று மொழியாக நுழைய விடாது தடுக்கும் அறிஞர்களின் முதுபேதைமையும் கடுஞ்சட்டத்தால் ஒழிக்கப் படும். இது பாரதி மேலாணை.

தீந்தமிழுக்குக் கதவைத் திறந்திடுமின் !
ஆக்கிய தமிழ்ச் சொற்களை ஆளவிடுமின் !
வடித்த கலைச்சொற்கட்கு வாய்ப்புவழங்குமின் !

நீயும் நானும்.

புலவர், பொதிகைச் செல்வன், பவானி.

(எடுப்பு)

தமிழுக்குள்ளே புகுந்திருப்பவன் நீயடா !—என்னுள்
தமிழ் புகுந்து விளங்குபவன் நானடா !...(தமிழுக்குள்ளே)

(தொடுப்பு)

அமிழ்துக்குள்ளே புகுந்தநஞ்சு போன்றவன் நீயே!—தூய
அமிழ்தையுண்டு களிக்கும் நெஞ்சு கொண்டவன் நானே!...
(தமிழுக்குள்ளே)

(முடிப்பு)

1. புலவன் நற்பா வலவனென்றும்
புதுமையெழுத் தாளனென்றும்
பொய்மையான போர்வைக்குள்ளே
புகுந்துகொண்டு நீ தமிழைக் கெடுக்கிருய்!—தமிழ்
நலங்கெடுக்கத் தமிழ் மொழியில்
நாளுமிங்கே உன்னெழுத்தில்
நான்குமொழிச் சொற்களெனும்
நஞ்சுபெய்தே தமிழருக்குக் கொடுக்கிருய் !
(தமிழுக்குள்ளே)

2. தேன் தமிழின் சொற்களையே
தேர்ந்தெடுத்து நானெழுதிச்
செந்தமிழர் சிந்தையெலாம்
செழிக்குமாறு தமிழமுதம் வழங்குவேன் !—உயர்
வான் தமிழாம் தனித்தமிழின்
வனப்பொளிர நானெழுதும்
மாட்சியுணர்ந் தேயுலகில்
மறத்தமிழர் விழித்தெழவே முழங்குவேன் !
(தமிழுக்குள்ளே)

3. நற்றமிழும் கற்றிடாமல்
நல்லுணர்வும் பெற்றிடாமல்
நாணமொடு மானமின்றி
நாடழிய ஏடெழுதித் தருகிருய் !—மக்கள்
குற்றங் குறை பாடுகளைக்
கொச்சையாக எழுதித்தமிழ்
கொஞ்சுமனம் நஞ்செனச் செய்
கொடுஞ்செயலை நீ வளர்த்து வருகிருய் !
(தமிழுக்குள்ளே)

4. பைந்தமிழின் பாலைநிதம்
பருகிவளர்ந் தென்னுடைய
பாங்குளம் நற் பொன்னியாறு
பாயுமெழிற் கழனியெனச் செழித்தவன் !—என்
சிந்தையிலே விளையுமொளி
செந்தமிழர் வாழ்வினிலே

சேர்த்திடவே பேரெழிலார்
செழுங்கடலில் எழுங்கதிர்போல் விழித்தவன் !
(தமிழுக்குள்ளே)

5. உன் வயிற்றைக் காத்தலொன்றும்
உயர்தமிழை மாய்த்தலொன்றும்
உனது கொள்கை யாகக்கொண்டும்
உயர்ந்து கொண்டே நீ தமிழை மாய்க்கிறாய் !—
வாழும்
என் தமிழர் மடமையெனும்
எருவினாலுன் வாழ்க்கைப்பயிர்
இனிதுவளர்த் தேதமிழர்
இங்கழிய நீயெமையே ஏய்க்கிறாய் !
(தமிழுக்குள்ளே)

6. இன்றமிழும் என்னினமும்
இனியதமிழ் நாடுமிங்கே
எழுச்சியுற்று விடுதலையை
எய்திடவே நானெழுதி வருகிறேன் !—தமிழ்
கொன்றழிக்கும் உன்னனையார்
கூட்டஞ்செயுங் கொடுமையெலாம்
கூர்ந்துணர்ந்தே என் தமிழர்
கொதித்தெழவே என்னெழுத்தில் தருகிறேன் !
(தமிழுக்குள்ளே)

7. நீங்கள்செயுங் கொடுமையெலாம்
நெஞ்சுணர்ந்து தமிழர்தலை
நிமிருகின்ற நாளொருநாள்
நிலத்தினிலே உறுதியாக வருமடா ! — அந்நாள்
தூங்குகின்ற மறத்தமிழர்
துடித்தெழுந்தே உங்களெண்ணம்
தூள்தூளாகச் செய்தெனது
தூய்தமிழ்க்கே வெற்றியினைத் தருமடா !
(தமிழுக்குள்ளே)

குறிப்பு : அண்மையில் ஈரோட்டிக்கு வருகை தந்த என் பேரன்பிற்கும் பெரு மதிப்பிற்கும் உரிய பாவலரேறு ஐயா அவர்களைக் காணச் சென்றேன். சில திங்களுக்கு முன்பு எதிர்பாராது என்னைக் கண்டதும் பாவலரேறு ஐயா அவர்கள் என் நலம் பற்றிக் கேட்டறிந்ததும் உள்ளம் களித்து "தமிழுக்குள்ளே புகுந்திருப்பவர்கள் அவர்கள் ; தமிழ் நமக்குள்ளே புகுந்து கொள்ளப் பெற்றவர்கள் நாம் ! எனவே தமிழ் நம் நலம் காக்கும்." என்று உவகை பொங்கி உணர்வோங்கிக் கூறினார்கள். ஐயா அவர்கள் அன்புடன் கூறிய வாய்மை சான்ற மணிமொழிகளே என்னை இப்பாடலை எழுதத் தூண்டின. உடனே இப் பாடல்களை எழுதி ஐயா அவர்களிடம் அளித்தேன். பாடல் எழுதத் தூண்டிய பாவரேறு ஐயா அவர்கட்கு என் நன்றி.

பெயர்ப் பட்டியல் :10.

தென்மொழி, தமிழ்ச்சிட்டு நிலைப்பாட்டு முயற்சிகள்!

தென்மொழி, சுவடி 20 ஓலை, 5, 6 இல் வெளியிடப் பெற்ற அறிக்கையின் படி தென்மொழி, தமிழ்ச்சிட்டு நிலைப்பாட்டு முயற்சிகளுக்குத் துணையாக நின்றுதவிய அன்பர்களின் பெயர்ப் பட்டியல் கீழே கொடுக்கப் பெறுகின்றது.

1. வாழ்நாள் உறுப்பினர்கள் பட்டியல் :

தென்மொழி : — உருபா.

34.	முனைவர் ச. எழிலரசி பால சுப்பிரமணியன் சென்னை-4,	200.00
35.	தரும. இராதா கிருட்டிணன், சென்னை-82	200.00
36.	இரா. சிவசண்முகம், இராமநாதபுரம்	200.00

2. பத்து உறுப்பினர்கள் சேர்த்த பயனுறு தொண்டுள்ளப் பேராளர்கள் :

தென்மொழி :

11.	க. இளந்திரையன், வள்ளியூர்.	11x15 :	165.00

தமிழ்ச்சிட்டு :

21.	மா தங்கராசு, நத்தம்,	22x6 :	132.00
22.	அ. தங்கவேலு, மணலூர்ப் பேட்டை	16x9 :	144.00
23.	க. இளந் திரையன், வள்ளியூர்	26x6	156.00

3. நன்கொடை நல்கிய நல்லருளாளர்கள் : (10-7-86 முதல் 17-7-87 முடிய)

1.	புலவர் இரா. தமிழ்வேந்தன் எழில், கடலூர்.	20.00
2.	அருள்மணி, வெங்காலூர்,	100.00
3.	தென்மொழி, நா. இளமாறன், எண்ணூர், (ஆகத்து 86' மாத அன்பளிப்பு.)	100.00
4.	க. பழனியப்பன், திருச்சி(ஆக'86-க்கு)	25.00
5.	இராமசாமி, பல்லடம்	10.00
6.	க. இராயவேல், சென்னை	21.00
7.	அருள்மணி, வெங்காலூர்	20.00
8.	தென்மொழி, நா. இளமாறன், எண்ணூர் (செப்டம்பர் 86' மாத அன்பளிப்பு)	100.00
9.	க. பழனியப்பன், திருச்சி, (செப்டம்பர் 86' மாத அன்பளிப்பு)	25.00
10.	இ. அருள் நேயன், இராம நாதபுரம் மாவட்டம்	1.00
11.	கடலூர். மணிமாறன், திருச்சி மாவட்டம்	25.00
12.	க. கண்ணன், திருச்சி மாவட்டம்,	1.00
13.	க. ப. அறவாணன், சென்னை	100.00
14.	அரிமா வளங்கோ, பிரான்சு	2,081.70
15.	பைந்தமிழ்ப் பாசறை, சென்னை	10.00

16.	தென்மொழி நா. இளமாறன், எண்ணூர் (அக்டோபர் 86' மாத அன்பளிப்பு)	100.00
17.	மருத்துவர். இராமச்சந்திரன், கரூர்	201.00
18.	நா. வினைதீர் குன்றன், காரைக்குடி	100.00
19.	மருத்துவர். அ. விசுவநாதன், மேட்டூர் அணை	10.00
20.	இரமிலா தேவி, காந்தி கிராமம்	10.00
21.	க. இராமசாமி, திருநெல்வேலி	3.00
22.	இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம், மகேந்திர புரி.	100.00
23.	க. பழனியப்பன், திருச்சி, (நவம்பர் 86' மாத அன்பளிப்பு)	24.00
24.	பொன். பாலகிருட்டிணன், மலேசியா (புரப்பாளர் தொகை)	1,000.00
25.	க. பழனியப்பன், திருச்சி, (திசம்பர் 86' மாத அன்பளிப்பு)	30.00
26.	தென்மொழி. நா. இளமாறன், எண்ணூர், (திசம்பர் 86' மாத அன்பளிப்பு)	100.00
27.	க. பழனியப்பன், திருச்சி, (சனவரி 87' மாத அன்பளிப்பு)	40.00
28.	தென்மொழி. நா. இளமாறன், எண்ணூர், (சனவரி 87' மாத அன்பளிப்பு)	100.00
29.	தென்மொழி, நா. இளமாறன், எண்ணூர், (பிப்ரவரி 87' மாத அன்பளிப்பு)	100.00
30.	க. பழனியப்பன், திருச்சி (பிப்ரவரி 87 மாத அன்பளிப்பு)	30.00
31.	அரசத் தொகையன், சென்னை, (பிப்ரவரி மாத அன்பளிப்பு)	25.00
32.	அ. செல்வமணி, (புதுவண்ணைக் கூட்டத்தில்)	10.00
33.	செங்கோட்டை நல்லையா, மலேசியா	10.00
34.	நா. செல். அமைச்சியப்பன், மலேசியா	60.00
35.	நிலாவழகன், சென்னை,	100.00
36.	மு. அறிவாளி, கொத்த மங்கலம்	10.00
37.	க. பழனியப்பன், திருச்சி, (மார்ச்சு மாத அன்பளிப்பு)	20.00
38.	வேலாயுதம், சென்னை	5.00
39.	கா. பழனியப்பன், திருச்சி, (ஏப்ரல் மாத அன்பளிப்பு)	30.00
40.	ஏ. எசு. சுப்பு, பூட்டான்,	21.00
41.	வீர. செல்லக் கண்ணு, கோவை	71.00
42.	செண்பக ராமன், கோயில்பட்டி,	21.00
43.	அரசத் தொகையன், சென்னை (மே மாத அன்பளிப்பு)	50.00
44.	பேரா. அரங்கச் செல்வனார், கோபி	1.00
45.	க. பழனியப்பன், திருச்சி, (மே மாத அன்பளிப்பு)	30.00

செய்திகள்

1. சம்பந்தமூர்த்தி—சிலம்புச் செல்வி-வாழ்க.

திருச்சிமாவட்டம் ஆண்டி மடம்—விளந்தை அருணை திரையரங்கில் 4.9.87 வெள்ளிக்கிழமை அன்று காலை 9 மணியளவில் குவாகம் வே. கேசவன்- ரஞ்சிதம் இணையரின் புதல்வனும், திருத்தவத்துறை நிலஅளக்கைத்துறை ஆய்வாளரும் ஆகிய செல்வன். சம்பந்த மூர்த்தி., அறி.மு., புவி.பட்., தா. பழூர்—வேலாயுதம் பாளையம் புலவர் தா. மா. சாமிநாதன்—சரோசா இணையரின் புதல்வி. சிலம்புச்செல்வி, க.மு., கல்.இ., ஆகியோரின் திருமணம் உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் சீரிய தலைமையில் நடைபெற்றது.

மணமக்களை வாழ்த்தி உலகத்தமிழ்க் கழகத்தின் பொதுச் செயலர் குடந்தை—கதிர். தமிழ்வாணன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வை. பூவாராகவ சாமி, உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் துணைப் பொதுச் செயலர் திரு.தென்னவன்கோ ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

46.	நிலாவழகன், சென்னை	31.25
47.	கீதா உதயகுமார், ஐதராபாது	16.00
48.	க. பழனியப்பன், திருச்சி (சூன் மாத அன்பளிப்பு)	30.00
49.	வீ. சு. பிள்ளை, சிம்லா	21.00
50.	க. பழனியப்பன், திருச்சி, (சூலை மாத அன்பளிப்பு)	30.00
51.	க. பழனியப்பன், திருச்சி, (ஆகத்து மாத அன்பளிப்பு)	30.00
52.	அ. தனபாலன், நியூ பாம்பே,	15.50
53.	அரசத் தொகையன், சென்னை (ஆகத்து மாத அன்பளிப்பு)	50.00
54.	அருள்மணி, வெங்காளூர்,	30.00
55.	அரங்கச் செல்வனார், கோபிசெட்டிப் பாளையம்	100.00
56.	அரசத் தொகையன், சென்னை	10.00
57.	மருத்துவர், இராமச் சந்திரன், கரூர்	1,000.00
58.	க. பழனியப்பன், திருச்சி (செப்டம்பர் மாத அன்பளிப்பு)	30.00
59.	அரசத் தொகையன், சென்னை (செப்டம்பர் மாத அன்பளிப்பு)	10.00
60.	புலவர். இரா. வடிவேலனார், ஈரோடு (புரப்பாளர் தொகை)	1,000.00

மணவிழாத் தலைவர் பாவலரேறு அவர்களின் நிறைவுரைக்குப்பின் திரு. திருமா வளவன் நன்றி நவில, இனிய பகல் விருந்துடன் திருமண நிகழ்ச்சிகள் நிறைவடைந்தன.

2. ஆசிரியர்கள் நாள் விழா--அரவக்குறிச்சி.

திருச்சி மாவட்டம், கரூர் வட்டம் அரவக்குறிச்சி சரக ஆசிரியர் கழகத்தின் சார்பாக 'ஆசிரியர்கள் நாள்' விழா தி. பி.2018 மடங்கல் திங்கள் 22-ஆம் நாள் (7.9.87) முற்பகல் 12.மணியளவில் அரவக்குறிச்சி ஆர். சி. நடுநிலைப் பள்ளியில் சிறப்புற நடைபெற்றது.

அரவக்குறிச்சி, கோட்டைப்பட்டி, ஆண்டிப்பட்டி, ஈசநத்தம், மலைக்கோவிலூர் ஆகிய நடுவங்களைச் சேர்ந்த ஆசிரியர்களும், உள்ளூர் வெளியூர் நண்பர்களும், திரு. முத்து கந்தவேள், திரு. ஒடவை தமிழ்வேந்தன் ஆகிய தென்மொழியன்பர்களும், தென்மொழி அமைச்சர் திரு. கல்லை அருட்செல்வன், கரூர் வட்ட உ. த. மு. க. கிளைத் தலைவர் திரு. ப. எழில்வாணன் ஆகியோரும் வருகை தந்திருந்தனர்.

ஆசிரியர் திரு. தொல்காப்பியன் அவர்கள் விழாவுக்குத் தலைமை ஏற்றார். தமிழ்த்தாய் வாழ்த்திற்குப்பின் ஆசிரியர் திரு. சி. கோபால் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். தலைவரின் முன்னுரையை அடுத்து ஆசிரியர் திரு. ஆரோக்கியசாமி அவர்கள் அறிக்கை படித்தார்.

ஓய்வு பெற்ற ஆசிரியர் திரு. து. செல்வராசு, திருவாட்டி தங்கம்மாள் ஆகியோர்க்கு நூலாடை போர்த்தப் பெற்றபின், ஒன்றியப் பெருந்தலைவர் திரு. கா. சாமியப்பன் அவர்கள், அவர்களுக்கு நிலைவெள்ளிக் குடங்களை அன்பளிப்பாக வழங்கினார்.

அரவக்குறிச்சித் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. செகதீசன் அவர்களும், மற்றும் ஆசிரியர்கள் திரு ஏ. சிவஞானம், திரு. கார்முகில் ஆகியோரும், பேரூராட்சித் தலைவர் திரு, செய்னுலாபுதீன், பெருந்தலைவர் திரு. கா. சாமியப்பன் ஆகியோரும் உரையாற்றினர்.

ஆசிரியர் திரு. க. வடிவேல் அவர்கள் பாவலரேறு அவர்களுக்கு நூலாடை போர்த்திச் சிறப்பித்தார்.

இறுதியாகத் தனித்தமிழ் அரிமாவும், உ. த. மு. க. முதல்வரும் ஆகிய பாவலரேறு திரு. பெருஞ்சித்தரனார் அவர்கள் ஆசிரியர்களின் அருமை பெருமைகளையும் இன்றைய நிலையில் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள தாழ்வுகளையும், அவற்றைப் போக்குவதற்குரிய வழிமுறைகளையும், 17 ஆண்டுகட்கு முன்பே அவர் எழுதிய பாடல் மூலம் ஆசிரியர்களைப் பற்றிய கருத்துகளையும் உணர்வுப் பிழிவோடும், நகைச்சுவையோடும் எடுத்துக் கூறி ஆசிரியர்களை எழுச்சி பெறச்செய்தார்.

பாவலரேறு அவர்களின் எழுச்சி மிக்க வீர உரையைக்கேட்ட ஆசிரியர்கள் வியப்பும், மகிழ்ச்சியும் உற்றனர். தலைவரின் முடிவுரைக்குப் பின் ஆசிரியர் திரு. கிருட்டிணசாமி அவர்கள் நன்றி கூற, நாட்டுப்பண்ணுடன் விழா இனிதே நிறைவுற்றது.

— செய்தி- ப. எழில்வாணன், க. மு.

3. அரங்க. செங்குன்றன்—இரா. வெற்றியழகி-வாழ்க!

சென்ற கன்னி 16 (2.10.87) ஆம் பக்கல், காலை 8மணியளவில் புதுவை மாநிலம், பாகூர், தருமராசர் திருமண மண்டபத்தில், திருவாளர். நா. அரங்கசாமி—வேதவல்லி ஆகியோர் தலைமகன், செல்வன், அரங்க. அருணசலம் என்ற அரங்க — செங்குன்றன் அவர்களுக்கும், தெ. ஆ. விழுப்புரம், நகரி, திருவாளர்கள் இராமச்சந்திரன்—சந்திரா ஆகியோர் மகள், செல்வி. இரா. செயசுந்தரி என்ற இரா. வெற்றியழகிக்கும், பாவலரேறு பெருஞ்சித்திரனார் தலைமையில், இனிதே தமிழ்த் திருமணம் நடைபெற்றது. தலைவரின் முன்னுரையைத் தொடர்ந்த திருமண நிகழ்விற்குப் பின், மணமக்களை வாழ்த்தி, தஞ்சைத்தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் தூயதமிழ்ச் சொல்லாக்க அகராதிப் பதிப்பாசிரியர், வழக்கறிஞர் திரு. ப. அருளி அவர்களும், அவர்களைத் தொடர்ந்து, புலவர் திரு. வ. கலியபெருமாள், திரு. தா. பார்த்தசாரதி, திரு. திருக்குறள் பெருமாள், ஆகியோரும் மணமக்களை வாழ்த்தி அரிய நல்லுரை வழங்கினர்கள். அதன் பின்னர், மணமக்களை வாழ்த்தும் முகத்தான் பாவலரேறு அவர்கள் திருமண நிறைவுரையாக 2 மணிநேரம் அரியதொரு வரலாற்றுக் கருத்துரை யாற்றினர்கள். இறுதியில், பாகூர் மறைமலையடிகள் தமிழ் மன்றத் தலைவர் கா. பெரியதம்பி அவர்களின் நன்றியுரையுடன் விழா சிறப்புற நிறைவுற்றது. மணவிழாவிற்கு பாவலரேறு அவர்கள் குடும்பமும் அருளி அவர்கள் குடும்பமும் வந்திருந்து மணமக்களை வாழ்த்தியது குறிப்பிடத் தக்கது. ○

"தென்மொழி"

சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

ஆண்டுக் கட்டணம்	:	உருபா 20.00
அரையாண்டுக் கட்டணம்	:	,, 10.00
தனியிதழ்	:	,, 1.75

ஓரிதழுக்கு உருபா 3.50 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க !

தொடர் : 2. நூற்சுருக்கம்

இன்றுள்ள தமிழர்கள்!

நூல் : தமிழர்மேல் நிகழ்ந்த பண்பாட்டுப் படையெடுப்புகள்
ஆசிரியர் : பர். க. ப. அறவாணன்.
விலை : 304 பக்கம். உரு 25/-
கிடைக்குமிடம் : ஐந்திணைப் பதிப்பகம்,
282, பைகிராப்ட்சு சாலை, திருவல்லிக்கேணி, சென்னை-5.

தமிழரிடம் பின்பற்றும் செயல்முறை பொதுவாகக் குறைவு. ஈராயிரமாண்டுகளுக்கு முன்பே தமிழரிடையே திருவள்ளுவ மேதை தோன்றினர். அவர்தம் திருவள்ளுவம், குமுகப் பொருளியல் அரசியல் நெறிகளை, அவர்தம் கால அளவில் புதிதாகச் சமைத்தது. ஆனால் திருவள்ளுவம் இலக்கியப் பொருளாகப் போற்றப் பட்டதே தவிர, அரசரால், மக்களால் பின்பற்றத் தகும் வழிகாட்டு நூலாகக் கொள்ளப்பட வில்லை.

மனுவை அரசியல் நெறி உரைஞராக ஏற்றுக் கொண்ட தமிழ் அரசர், திருவள்ளுவரை அவ்வாறு ஏற்றுக் கொள்ளவில்லை. திருக்குறளை அன்னார் அரசியல் நூலாகப் போற்றவும் இல்லை. தமிழகத்தில் அறிஞர்களால் அறிந்து, அறிவிக்கப் பட்ட அரிய சிந்தனைகள் பின்பற்றுவார் இல்லாமல் ஓலைச் சுவடிகள் ஒடுங்கின; மேடை முழக்கோடு அடங்கின.

தன்னம்பிக்கை வேர் கொள்ள மொழியே முதற்படி :

தன்னம்பிக்கை வேர் கொள்ள, மொழிதான் முதற்படி. தமிழில் அனைத்தையும் தொடக்கப் பள்ளி முதல் பல்கலைக் கழகக் கல்வி வரை, தமிழ் வழியேதான் பாடங்களைப் பயிற்றுவிக்க வேண்டும். தமிழ்வழிப் படித்தோருக்குத்தான் தமிழ்நாட்டில் வேலை என்ற நிலையை உருவாக்க வேண்டும். ஆட்சி, நெறிமன்றம், கோயில் முதலான அனைத்து நிலையிலும், தாய்மொழித் தமிழையே அரங்கேற்ற வேண்டும். இதனால், தான் அறிந்த மொழியால் எதுவும் ஆகும், எல்லாம் ஆகும் என்ற மனப்பான்மை வளரும். பிறமொழி வழி நேரும் தாழ்வு மனப் பான்மை, அயல் மொழிப் பண்பாடு, நாகரிக வேட்கை முதலாயின விடைபெறும். தன்னம்பிக்கை உரம் பெறும்.

தமிழ்த்தேசிய உணர்வு :

சப்பானில், சீனாவில், செருமனியில் வளர்க்கப்படுவது போன்ற தமிழ்த்தேசிய உணர்வு வளர்க்கப் படின், தனிமானம் குறைந்து, இன மானம் பெருகும். பெருகவே கூட்டூக்கம் (Team Sprit) வளரும். தனி நலம் குன்றும். பிறர் நல உணர்வு பெருகும். எனவே அடுத்தவனைப் பற்றிக் கவலைப்படும், கவனம் கொள்ளும் குமுக விழிப்புணர்வு (Social Awareness) ஊற்றங் கொள்ளும்.

அரசியல் அமைப்பியல் புத்தமைப்பு :

இப்போதுள்ள அரசியல் அமைப்பியல், தனிமாந்தத் தன்னலத்தையும், பிற மாந்தரைச் சுரண்டும் போட்டி உணர்வையும், பண நோக்கத்தையும், குறிப்பிட்ட வட்டார மொழி ஆளுமையையும், ஏற்றத் தாழ்வையும் வளர்க்கும் முதலாளிய அரசியல் அமைப்பாகும். இதனை முற்றுமாக மாற்றிச் சாதி, மத, மொழி, இன, வட்டார ஆளுமையை ஒடுக்கும் சமநிலை அரசியல் அமைப்பியலை அமைத்துக் கொண்டாக வேண்டும்.

சாதி, மதச் சார்பின்மை :

சாதி அடிப்படையில், மத அடிப்படையில் இயங்கும் 'சங்க' அமைப்புகள், சலுகை அறிவிப்புகள் அனைத்தும் ஒழிக்கப் பட வேண்டும்... சாதி மத பேதமற்ற சமநிலைக் குமுகாயத்தை உருவாக்க வேண்டும்.

தமிழர் தம் தொடர் தோல்விக்குப் பல காரணங்கள் கூறப் படினும் அவற்றுள் இன்றைய சூழலில் தலைமையானவையாகக் கருதப்பட வேண்டியவை இரண்டு.

1.) தமிழர்க்கு அன்றும் இன்றும் தொலை நோக்கு என்பது மருந்துக்குக் கூட இல்லாமை.

2.) கடந்த காலப் பெருமைகளை மட்டும் சலித்து எடுத்துப் பீற்றிக் கொள்ளும் தமிழர், கடந்த காலப் பிழைகளைப் பார்க்க மறுக்கின்றமை, ஏற்க மறுக்கின்றமை.

மொழி அழிவு :

தமிழர்கள் தம் மொழி அழிந்து, கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்ந்து வருவதை, மாய்ந்து வருவதை, சுருங்கி மறைந்து வருவதைப் பார்க்கத் தவறி விட்டார்கள். சான்று : வட வேங்கடம் முதல் தென் குமரி வரை தமிழ் பரவி இருக்கிறது என்று இலக்கியத்தின் முகப்பு தோறும் எழுதி வந்த தமிழன் இன்று எழுத முடியுமா ? இனியும் எழுத முடியுமா ? எண்ணிப் பாருங்கள்.

இருபதாம் நூற்றுண்டில் தன்னுரிமை பெற்ற உலகில் உள்ள சிறு சிறு நாடுகள் கூடத் தம் மொழிகளைத் தம் நாட்டின் ஆட்சி மொழியாக, அறமன்ற மொழியாக, கல்வி மொழியாகக் கொண்டு விளங்குவதைப் பார்க்கிறோம். பார்த்தும் பல தலைமுறை பெருமை உடையவர்களாகச் சொல்லிக் கொள்ளும் தமிழர்கள், மேற்கண்ட ஒரு நிலையைக் கூடத் தமிழ்மொழி அடையவில்லை என்பதைப் பார்க்க மறுக்கிறார்கள். ஒவ்வோர் அரசியல் ஆளுமையின் போதும் அந்தந்த ஆளுமைக்கு இணக்கமான மொழிக்கும் மக்களுக்கும் எளிதாக அடிமைப் பட்டுப் போகிறார்கள்.

யார்யாருக்கு அடிமை :

தமிழ்நாட்டில் சைனர் ஆளுமையில் இருந்தபோது தமிழர்கள் பிராகிருதத்திற்கு அடிமையாக இருந்தார்கள். பௌத்தர் சாய்கால் இருந்தபொழுது பாலி மொழிக்கு அடிமையாக இருந்

தார்கள். வட இந்திய வைதிகர் வந்த நாள் தொட்டு அவர்தம் சமசுக்கிருத மொழிக்கு அடிமையாக இருந்தார்கள் ; இருக்கிறார்கள். விசயநகர்த் தெலுங்கர்கள் தமிழ்நாட்டைக் கைப்பற்றிய நாள்களில் தெலுங்கிற்கு அடிமையானார்கள். தில்லி முகலாயச் சுல்தான்கள் தமிழ்மண்ணைத் தொட்ட நாள் தொட்டு, அராபிய, உருது, இந்துத்தானி, பாரசீக மொழிகளுக்கு அடிமையானார்கள். மராத்தி சிவாசியும், அவன் தம்பியும் அவர்கள் தலைமுறையும் தஞ்சையை ஆட்கொண்ட நாளிலிருந்து மராத்திக்கும், குசராத்திக்கும் அடிமையானார்கள். 1498-இல் கள்ளிக்கோட்டையில், வாசுகோடகாமா வந்து இறங்கிய காலம் தொட்டுப் போர்த்துக்கீசிய மொழிக்குஅடிமையானார்கள்.பிரான்சுக்காரர்கள் தென்னிந்தியாவைப் பிடித்து ஆட்சி செய்த போது தமிழர்கள் பிரஞ்சு மொழிக்கு அடிமை ஆனார்கள். முந்நூறாண்டுக்கு மேலாகப் பத்தாயிரம் கற்கள் கப்பல் பயணம் செய்து தென்னகம் போந்த ஆங்கிலேயர்தம் மொழிக்குத் தமிழர்கள் நிலைத்த அடிமைகள் ஆனார்கள். 1947க்குப் பிறகு உரிமை பெற்றும், மொழி உரிமை பெறா நிலையில் சற்றும் வெட்கம், மானம், கூச்சம் எதுவும் இல்லாமல் புதிய வரவான இந்தி மொழிக்கு அடிமை ஆக வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். ஆக, அன்று தொட்டு இன்று வரை, கடந்த காலங்களைத் தொகுத்துப் பார்த்தால் தமிழர்கள் காலந்தோறும் ஏதேனும் ஒரு மொழிக்கு அடிமையாக இருப்பதையே குணமாகக் கொண்ட நோயாளிகள் என்பது புலப்படும்.

தமிழர் வாழ்வியலில் மொழியியல் பண்பாட்டியல் வீழ்ச்சி !

மொழி உணர்வு, இன உணர்வு ஆகியன ஏனைய இன மக்களுக்கு உள்ளமை போலத் தமிழர்களுக்கு இல்லை என்பது மட்டுமல்லாது அவற்றை விட அவர்கள் பண்பாட்டிலும் தமக்குரிய இயல்புகளை எல்லாம் கிட்டத்தட்ட இழந்து நிற்கின்றனர். இழந்து கொண்டே வருகின்றனர்.

நகரில் வாழும் தமிழருடைய ஒரு குடும்பத்தை உற்றுப் பாருங்கள். அவர்களுடைய உறைவிடம் ஐரோப்பிய முறையில் அமைக்கப்பட்டது. அவர்தம் உணவுகள், பல் துலக்கும் முன் 'காப்பி', பல் துலக்கிய பின் 'டிபன்', பூரி, சப்பாத்தி, குருமா, பிரட், ஜாம் ; பள்ளிக்குப் புறப்படும் குழந்தைகள் தமிழ்நாட்டு வெப்பத்திற்கு ஆகாத கால் முதல் தலைவரை மூடிய உடைகள் ; இடையிடையே குழந்தைகளின் 'மம்மி', டாடி' அழைப்புகள், அரைகுறை ஆங்கிலத்தில் உரையாடல்கள். விடைபெறும். குழந்தைகளின் 'டாட்டாக்கள், பைபை'கள். மூத்த மகளின் பஞ்சாபி குர்தாக்கள், 'ஜீன்'கள். அலுவலகம் செல்லும் 'டாடி'யின் வேர்க்க விறுவிறுக்கும் கம்பளிக்கோட்டுகள், குளிர்தாங்க முடியாமல் அவர் கட்டிக்கொள்ளும்'டை'கள், 'டாடி'யும் 'டாட்டா'வும் 'சன்'னும் வீட்டை விட்டுப் போன பிறகு, பகல் திரைப்படம் பார்க்கச் செல்லும் அம்மாவின் ஒப்பனைகள், கருப்பு உதட்டுக்கு

அம்மா போட்டுக் கொள்ளும் சிவப்புச்சாயம், மருதோன்றிச் சிவப்பு இருக்க வேண்டிய உகிர்(நகங்)களில் சிவப்புப் போலிப் பூச்சு, சின்ன அகவையில் எழிலான மூக்குத்தி அணிய இடப்பட்ட மூக்குத் தொளையை மூடிய முகமா(பவுடர்)அழகு, நன்றாகத் தெரியும் கண்ணுக்குப் போலிக்கண்ணாடி, தமிழ்நாட்டு வெப்பத்திற்கே தகாத சப்பான் 'சாரி' 'சாக்கெட்', வளையல்கள் குலுங்கிய வலக் கையில் கடிகாரம், மஞ்சள்பூச்சை மறந்து மீசை முளைக்கும் ஆண் பிள்ளை ஆகிவிட்ட திருமுகம், சேலைக்கு உள்ளே உள்ளதா வெளியே உள்ளதா என்று தோன்றித் தோன்றி மறையும் உள் பாவாடை, மேல் மார்பைத் துருத்திக் காட்ட காலுக்கு அணியும் குதியுயர் செருப்புகள், அவற்றோடு அம்மா அதோ 'சினிமா' வுக்குப் புறப்பட்டு விட்டாள்.

பள்ளிக்குப் போன பிள்ளைகள் படிப்பது ஆங்கிலம், அலுவலகத்தில் சென்ற அப்பா எண்ணுவதும், எழுதுவதும் ஆங்கிலத்தில். மாலை கோயிலுக்குச் சென்றால்'சமசுகிருதம்'. அறமன்றத் தீர்ப்பைக் கேட்டால் 'ஆங்கிலம்'. வானொலி, தொலைக்காட்சி, தில்லி நடுவண் அரசு நிறுவன 'வாய்'களைத் தொட்டால் 'இந்தி'. பாட்டு அரங்குக்குச் சென்றால் 'தெலுங்கு', 'இந்துத்தானி' 'டிஸ்கோ'.

மூத்த தமிழர் முருகனை வழிபட்டனர் ; கொற்றவையை வழிபட்டனர். ஆரியச் சார்பு ஒரு புதுக்கடவுள் பட்டாளத்தையே தமிழ்நாட்டில் அறிமுகப் படுத்தியது. தமிழர்கள் அத்தனைப் பேரும் அத்தனைத் தெய்வத்தையும் வழிபட்டனர். கி. பி. 3-ஆம் நூற்றாண்டளவில் சைனர் முதன்மை பெற்ற போது தமிழரின் தலைமை வழிபாடு மகாவீரராக மலர்ந்தது ; புத்த தேவராகப் புலர்ந்தது. சைன, பௌத்தத்தை வீழ்த்தி மீண்டும் ஆரியம் எழுச்சி பெற்றது.

குறிஞ்சிப் பொதியமலை முருகனும், அவன் தாய் கொற்றவையும் ஆகிய இரண்டு பேரும் கைலாயமலை நீலகண்டனுக்கு மகனும் மனைவியும் ஆயினர். 'விஷ்ணு' அளியர் ஆயினர். மகாவீரரையும் புத்தரையும் விட்டு விட்டுப் புதிய மகேசர்களைத் தமிழர் வழிபட்டனர். பல்லவர்கள் ஆளுகையில் பப்பாயிலிருந்து வருகை புரிந்தார் விநாயகப் பெருமான். ஆற்றங் கரையிலும், குளத்தங் கரையிலும், சாலை சந்திப்புகளிலும் புதிய விநாயகர் அமர்த்தப் பட்டார். அவரைச் சுற்றிச் சுற்றி வணங்குவதில் பழகிப் போயினர் எம் தமிழர். தில்லி மாலிக்காபூரின் வரவுக்குப் பிறகு எம் தமிழருள் ஒரு பிரிவினர் இசுலாம் ஆயினர். 'அல்லா' என நாள் தோறும் ஐந்துமுறை பாத்தியா ஓதினர். விசய நகர வைணவர் வந்தபோது, நாமம் இட்ட வைணவத் தெய்வங்கள் தமிழர்களின் தலைமைத் தெய்வங்கள் ஆயின. முருகனை விட்டு, அருகனை விட்டு, அம்மனை விட்டு, திருப்பதி பெருமாளைச் சென்று வணங்கினர். ஐரோப்பியர் வந்து ஆங்கிலேயர் ஆட்சி நிலைபெற்றபோது தமிழருள் பலர் ஏசு தொண்டர் ஆயினர். நாற்பத்தேழில் தன்

னுரிமை வந்தது. தமிழர் மலையாளத்து ஐயப்பனுக்கு அடித் தொண்டர் ஆயினர்; கருநாடகத்து மூகாம்பிகைக்கு முழு அடி யாராயினர். ஆக, தமிழர்கள் கிட்டத்தட்டத் தம் தனிவாழ்வில், குடும்ப வாழ்வில், பொதுவாழ்வில், குமுக வாழ்வில், சமய வாழ் வில், தமக்கு உரிய பழக்க வழக்கப் பண்பாட்டு நாகரிகங்களை இழந்து விட்டனர்.

தமிழ்ப் பண்பாடு எங்கே ?

தமிழ்நாட்டின் மேல் ஆயிரக் கணக்கான அரசியல் படை யெடுப்புகள் நிகழ்ந்தன. வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வந்தன; போயின. ஆனால் அவ்வப்பொழுது வந்த அயல் நாட் டார், அயல் இனத்தார் தம் அரசியல் படையெடுப்புகள் நின்ற போதிலும் அவர்கள் விட்டுச் சென்ற பண்பாட்டுக் கலப்புகள் தமி ழர் வாழ்வை விட்டு விலகவே இல்லை; சொல்லப் போனால், நூற்றுக் கணக்கான பண்பாட்டுப் படையெடுப்புகளின் வெற்றி எச்சங்கள் தமிழர் வாழ்க்கை மேனியில் அவர்தம் அடையாளம் தெரியாத அளவிற்கு விழுப்புண்களாக மறைந்து நிற்கின்றன; மறைத்து நிற்கின்றன. உண்மையில் தமிழர்தம் நடைமுறை வாழ்வில் தமிழ்ப்பண்பாடு என்ப தொன்றும் இல்லை.

இந்த உண்மை நிலை தெரியாமல் தமிழ்ப்பண்பாடு என்று நாம் உரக்கக் கத்திக் கொண்டிருக்கிறோம்; ஆனால் உறுதியாகவும் இறுதியாகவும் தமிழ்ப்பண்பாடு அயல் பண்பாட்டுப் படை யெடுப்புகளால் வழக்கொழிந்து விட்டது.

இன்று தமிழ்ப்பண்பாடு என்பது ஒரு பொருட்காட்சிப் பொருளாகி விட்டது. இந்த வரலாற்று உண்மையை நன்கு அறிந்த சில வம்பர்கள், பண்பாட்டுப் படையெடுப்புகளையும் பண் பாட்டுக் கலப்பினையும் வரவேற்று எழுதுகிறார்கள்; பேசு கிறார்கள். அதுதான் உலக இயல்பு என்று பொய் வேதம் படிக் கிறார்கள்... இன்றைய புத்துலகில் பண்பாட்டுக் கலப்பு நிகழ் வதைத் தவிர்க்க முடியாது என்பது உண்மை. தமிழ்நாட்டில் நேற்று நிகழ்ந்ததும் இன்று நிகழ்வதும் பண்பாட்டுக் கலப்பன்று; ஒரு பண்பாட்டு அழிப்பு; அழிவு. மூச்சை அடக்குவது வேறு; மூச்சையே விட்டு விடுவது வேறு. தமிழர்கள் தமிழ்ப்பண்பாட்டு மூச்சையே விட்டு விட்டனர் என்பதுதான் இந்த நூலின் பேச்சு, மூச்சு, எல்லாம்!

(தொடரும்)

அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேச வும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள் களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக் கொண்டு வருமாறு வேண்டிக்கேட்டுக்கொள்கிறோம். -அமைச்சர்.

பெருஞ்சித்திரனார் விடையளிக்கிறார்

(வியப்பான சில வினாக்களும் விடைகளும்.)

1) மக்களுக்காக நடத்தப்படும் கொள்கை இதழ்கள், வணிகத்துக்காக நடத்தப்படும் இதழ்கள், வயிறு கழுவ நடத்தப்படும் இதழ்கள்—இவற்றைப் பிரித்துணர்வதற்கு அடையாளங்கள் என்ன?

மக்களுக்காக நடத்தப்படும் கொள்கை இதழ்கள் — இவற்றில் ஓர் அரைப்பக்கத்துக்குக்கூட விளம்பரத்தைப் பார்க்க முடியாது.

வணிகத்துக்காக நடத்தப்படும் இதழ்களில் இங்கொன்றும் அங்கொன்றுமாகக் கெஞ்சிக் கேட்டுப் பெற்ற விளம்பரங்கள் பளிச்சிடும்.

வயிறு கழுவ நடத்தப்படும் இதழ்களில் செய்திகள் எட்டுப் பக்கம் என்றால் விளம்பரங்கள் பதினாறு பக்கங்களை அடைத்துக் கொண்டு கிடக்கும்!

அடையாளம் கண்டு கொள்க.

2) தமிழர்க்கு நன்மையான கூறுகள்—அரசியலில்—பொருளியலில்—குமுகவியலில்—மொழியியலில்— இலக்கியத்தில்—என்னென்ன?

பார்ப்பனர் பாராட்டிக் கொள்ளாத — வரவேற்காத அனைத்துக்கூறுகளும் தமிழினத்துக்கான கூறுகள்—இது பெரியார் கொள்கை. ஆனால் இதைத் தமிழர்கள் உணர்வதில்லை.

எடுத்துக்காட்டுக்காக—எழுத்துச் சீர்திருத்தத்தைப் பார்ப்பனத்தாள்கள் தாமே முதன்முதலில் வரிந்த கட்டிக் கொண்டு வரவேற்றன. இதிலிருந்து தெரியவில்லையா—இது தமிழை அழிக்கும் கொள்கை என்று! பார்ப்பான் முன்னுணர்ந்து கொள்வதைத் தமிழர்கள் பின்னும் உணர்வதில்லை.

3) வன்னியர் போராட்டத்தில் 40 கோடி உருவா இழப்பு என்று அரசுச் சார்பில் தெரிவிக்கப் படுகிறதே!

—அஃதென்ன அவர்கள் அப்பன் வீட்டுப்பணமா கவலைப் பட ? மக்கள் வரிப்பணந்தானே ! எனவே அதிலும் அவர்களுக்கு வரவேண்டிய வரவு வந்தே இருக்கும் !

4) எம். சி. ஆருக்கு நோபல் பரிசு தர முயற்சி செய்யப் படுகிறதே !

—இவருக்கு ஏற்கனவே 'நோ'பல் கிடைத்துள்ளதே, தெரி யாதா உங்களுக்கு ! அடுத்து, பரிசு எப்படி, எப்படி கிடைக்கப் பெறுகிறது என்பது எம். சி. ஆருக்குத் தெரியாதா?

5) காஞ்சி சாமியார் 'சமசுக்கிருதமே இந்தியாவின் தேசிய மொழியாக வரவேண்டும் என்றும், இந்தியாவைப் பாரதம் என்று சொல்லக்கூடாது; இந்துசுதான் என்றே அமைக்க வேண்டும்—என்றெல்லாம் கொள்கைகளை அறிவித்து ஓர் இயக் கம் தொடங்கியுள்ளாரே !

ஆடாத அருங்கூத்து ஆரியர்கள் ஆடினாலும் 'காரியத்தில்' கண்ணுயிருப்பர் என்பதைக் காஞ்சிப் பார்ப்பன சாமியார் மெய்ப் பித்திருக்கிறார். இதிலென்ன வியப்பு அல்லது தப்பு ?

6) தொலைக்காட்சியில் காட்டப்படும் தமிழ், இந்தி நிகழ்ச்சிகளைப் பற்றி உங்கள் கருத்துகள் என்ன ?

கேட்டுக் கொள்ளுங்கள் :

1. தமிழுக்கு ஒரு பங்கு என்றால் இந்திக்கு இரண்டு பங்குநேரம்;

2. தமிழ் நிகழ்ச்சிகள் அனைத்திலும் அம்மாமி அத்திம்பேர்த் தமிழ். ஈடுபடுவோரும் அவர்களே ! தப்பித்தவறித் தமி ழர்கள் தலை காட்டினால் அவர்கள் அனைவரும் சென்னைப் பார்ப் பனர் கால்களை நக்கிக் கழுவிக்குடிக்கும் கோழை அடிமைத் தமி ழர்களே ! என்றோ ஒருநாள் எப்படியோ ஓரிருவர் ஏனோ எதற்கோ தன்மானத் தமிழர்களின் தலைகள் தெரியும். அவர்களை யும் அதிகம் பேசவிடமாட்டார்கள். தொலைக்காட்சி நிலையம் தீப் பற்றிக் கொண்டால் என்ன செய்வது என்று அவர்களுக்கு அச் சமோஎன்னவோ ? இந்தி நிகழ்ச்சிகளில் அவ்வாறு இல்லை. அனை வரும் வறுத்தெடுத்த வடநாட்டு இந்திப் பார்ப்பன மொக ராக்கள்.

3. தமிழ்த்திரைப்படப் பாட்டுகளில் ஒன்றால், இளைஞர்களுக்கு வெறுப்பூட்டும் கற்காலம் ஒலிக்கும். அன்றால், காதலனும் காதலி யும் கட்டிப் புரண்டுபார்க்கின்ற பெரியவர்களுக்கு முகச்சுழிப்பை உண்டாக்கும் காட்சிகள் ! இல்லெனில் இளைஞர்களுக்குக் கிளு கிளுப்பை உண்டாக்கும் அருவருப்புக் காட்சிகள். பாடல்களோ கெக்கலி இசையில் முக்கல் முனுகல்கள் ! தமிழ்மொழியின் பெரு மையைக் குலைப்பதற்காகவே இவை தேடியெடுத்துப் போடப் படுகின்றன போலும். சில வேளைகளில் இசை நன்றாக இருக்கும் ; பாட்டுகளோ தெலுங்கில் இருக்கும் !

இந்தித் திரைப்படப் பாட்டுகள் அவ்வாறு இரா. இனிய நாகரிகமான கவர்ச்சி இசை. காட்சிகளும் பெரும் பாலும் அப் படியே !

அவர்களின் நோக்கம் தமிழ் என்றால் இப்படித்தான் இழுக்குடைய அழுக்குடைய மொழி ! இந்தியோ புதியன வாழ்வுக்கேற்ற புது நாகரிகமொழி என்று மக்கள் கருத வேண்டும்—என்பது.

4. தமிழ்த்திரைப்படங்கள் என்றாலும் பெரும்பாலும் முன்னர் கூறியபடிதான். இந்திப்படமோ நல்ல கதை ; நல்ல பாடல்கள் ; நல்ல நடிப்பு நிறைந்து நல்ல புதிய படியாகத் தெளிவாகவும் பளிச்சென்றும் தெரியும் படி இருக்கும்.

இனி, இன்னொன்று ; தமிழ்த் திரைப்படங்களில் ஆயிரம் வெட்டுகள் ; பாட்டுகள் அரை குறை ; நூறுதடவை சுருள் அறுந்துபோய்த் தடங்கலுக்கு வருந்துகிறோம் அறிவிப்பு பல்லைக் காட்டும். இந்தியில் ஒரு முறை கூட அவ்வாறு நேராது.

இனி, இன்னமும் ஒன்று ! எந்தக் கொம்பாதி கொம்பனின் தலையீடு என்றாலும், விளையாட்டு என்றாலும், தமிழ்ப் பாட்டுகள், படங்கள் அந்தோ, அந்தோ, அடியோடு தொலைந்து போகும். இந்திப்பாடல்கள் என்றாலும் சரி, படம் என்றாலும் சரி, அவற்றுக்கு என்றென்றும் தடையோ தவிர்ப்போ இருப்பதில்லை.

5. இறுதியாக இனி ஒன்றே ஒன்று ! இந்திக்காகத் தமிழ் நிகழ்ச்சிகள் அடிக்கடி தவிர்க்கப்பெறும். தலைகாட்ட விடமாட்டார்கள். ஆனால் இந்தி நிகழ்ச்சியின் இடத்தை எதற்காகவும் விட்டுத் தரமாட்டார்கள்.

என்ன நான் சொல்வது சரியாகப்படவில்லையா ? கொஞ்ச நாள் தொடர்ந்து கவனித்துப் பாருங்களேன்.

7. மலேசியா உலகத்தமிழ் மாநாட்டுக்குத் தாங்கள் அழைக்கப் பட்டீர்களா ? அல்லது தாங்களே செல்ல விருக்கின்றீர்களா ?

தமிழர்களிடத்தில் (அவர்கள் எங்கே வாழ்கின்றவர்களாக இருப்பினும் அவர்களிடத்தில்) உள்ள ஒரு நல்ல(!)குணம், தங்கள் தங்களை விளம்பரப்படுத்திக்கொள்ள யார் யார் தேவைப் படுகிறார்களோ அவர்களை மட்டுமே அழைப்பது, மதிப்பது, பாராட்டுவது என்பதாகும். நாம் யாருடைய தனி விளம்பரத்திற்காகவும் பயன்படாமற் போவதால், என் போன்றவர்கள் அவர்களுக்குத் தேவையில்லாமல் இருக்கலாம். இது முன்னுரை.

இனி முடிவுரையாகச் சில. நமக்கும்(!) அழைப்பு வந்தது. அஃதாவது நம் செலவிலேயே வந்து போக வேண்டும் என்று ! 'அவ்வாறு வரவியலாத நிலை, நம் நிலை; வரப்போகச் சீட்டெடுத்து அனுப்பினால் வருவதாக நம் அமைச்சர் எழுதினார். அதற்குத் தங்கள் பொருள்நிலை இடந்தரவில்லை என்று மறுத்து எழுதிவிட்டார்கள்.

எனவே வருத்தப் படாதீர்கள். நாம் அங்கு போகும்படி வராது.

நம்மை மதியாரை நாம் மதிக்க மாட்டேமால் ! ○

வாய்மையே வருக ! தாய்மையே வருக !
தேம்பாவே வருக !
செம்மொழிச்சீரே வருக ! நன்னெறியே வருக !
தமிழ் அரிமாவே வருக ! தனித்தமிழ் எழிலே வருக!
தமிழ் அமுதே வருக ! வணக்கம்.

—முல்லைத்தமிழ்மணி
—சிலாங்கூர் தமிழ் நெறிக்கழக நிகராண்மைக்குழு.
—கோலாலம்பூர்.

○ : *1247* : பெருமதிப்புக்குரிய ஐயாவுக்கு, தாங்கள் முதுமையிலும்—இளைஞனாக நின்று தமிழ்த்தொண்டு செய்து வருவதை—என்னால் மறக்க முடியவில்லை. தங்கள் முயற்சிகள் வெற்றி பெறவும்—தமிழினத்தின் விடிவுக்கு அவை வடிகாலாய் அமையவும்—என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அண்மைக் காலங்களில் இலங்கையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை அறிந்திருப்பீர்கள். இவையெல்லாம் ஏற்கனவே எதிர்பார்க்கப் பட்டவைதாம். வருங்காலம் எப்படி அமையுமோ தெரியவில்லை.

—வீரக்கோன், பிரான்சு.

○ : *1248* : அய்யா அவர்கட்கு வணக்கம். தென்மொழியில், செவ்வி ஒன்றில், தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்திற்கு உடன்பாடின்றித்தாங்கள் தெரிவித்துள்ள கருத்துகள் அறிவுநிலைக்கு மிகவும் முரணானவை. வரிவடிவங்களின் மாற்றங்கள், வளர்ச்சிகளை அறிந்தோர், தமிழ்நாட்டரசு செய்திருக்கும் எழுத்துச் சீர்திருத்தத்தை எந்நிலையிலும் இகழார் ! ஒதுக்கமுனையார் ! மொழி நல வினைகளையும், எழுத்துவடிவ மாற்றத்தையும் மோதவிட்டுக் குழப்புவது பொருளற்றதாகவே தோன்றுகிறது.

தமிழகத்து வரலாற்றிலே, மொழி, இலக்கியம், குமுகாயம் போன்றவற்றில் தாங்கள் பதித்த சுவடுகள் மிகவும் ஆழமானவை. தென்மொழி வீசித்தெளித்த விதைகளிலிருந்தே, எத்தனை எத்தனையோ பெருங்கானகங்களும், கழனிகளும் விளைந்து செழித்துள்ளன. எனவே,

தங்களின் உரைப்படைப்புகள், பாப்படைப்புகள் ஆகியவற்றை, உள்ளடக்க வாரியாகத் திரட்டி, உயர்ந்த தரத்தில் நூலாக்க வேண்டிய தேவை உள்ளது. இதன் முதற்படியாக, அரசியல் அல்லது குமுகியல் குறித்த தங்களின் தென்மொழி ஆசிரிய உரைகள் சிலவற்றைத் தேர்ந்து, ஒரு தேர்வுப்படைப்புகள் (Selected Works) வெளியிட்டாக வேண்டும் என எண்ணுகிறேன்; நூல் உயர்ந்த அச்சில், அன்னம்-அகரம்-நர்மதா வெளியீடுகளைவிடவும் செப்பமான உருவாக்கத்தில் வெளியிட வேண்டும் என்பது என் அவா.

தோழர்களின் அக்கறையும், ஈடுபாடும், பொருள் நல்கையும், உழைப்பும் இதற்குத்தேவை. இதுபற்றி எண்ணிப்பார்க்கவும், தோழர்களை ஈடுபடுத்தவும் வேண்டுகிறேன். என் ஒத்துழைப்பு என்றும் உண்டு. —இரணியன், கோவை-18.

○ : *1249* : மாண்புநிறை ஐயா அவர்கட்கு வணக்கம். ஈழப் போரை நினைக்கும்போது நெஞ்சம் பெரிதும் கலக்கமுறுகின்றது. அந்நாட்டுத் தமிழர்கள் உணர்வு பெற்றுக் கிளர்ந்தபோது மகிழ்வுற்றோம். நாமும் அவ்வுணர்வில் பங்கு பெற்றோம். போரின் இடையே அவர்கள் பல்குழுக்களாகப் பிரிந்து சிதறியபோது சற்றே கலங்கினோம். ஆனாலும் யாரோ ஒருவர் எவ்வழியிலாகினும் இனவிடுதலைக்குக் கரணியமாகட்டும்; தமிழீழம் மலரட்டும் என அமைந்திருந்தோம்.போரின் உச்சக்கட்டத்தில் இதோ நாளை, நாளை மறுநாள் ஈழம் மலரப்போகின்றது எனக்காத்திருந்த காலை

''ஓநாயும் நரியுங் கூடி ஒப்பந்தம் பேசி'' ஈழவிடுதலை இன்றும் இல்லை, ஏன்? என்றுமே இல்லை' எனவாக்கி விட்டனர்.

தன் இன ஒற்றுமையை — ஒற்றுமையால் உயர்வு—என் பதை உணராத தற்செருக்குத் தலைமையைக் கொண்ட போரா ளிக்குழுவும் தன் மறமானத்தை வேற்றினக் கயவர்களிடம் அடகு வைத்து விட்டது. வெற்று உறுமல் உறுமிக் காட்டியது, அப்புலி.

கயவர்களின் வஞ்சக வலையில் வீழ்ந்து பற்களும், விரல்உகிர் களும் இழந்த அப்புலி இப்போது மீதமுள்ள தன்னாற்றலைத் தன் னினக் குழுக்கள் மேல் காட்டி அழிக்கப்பார்க்கிறது. தன் னினத்தை அழிப்பது தன்னையே அழித்துக்கொள்வது என்பதை அறியாத பேதைப்புலியாகத் தன்னை காட்டிக் கொள்கிறது.

இந்நிகழ்களை அறியும்போது நெஞ்சில் எழும் கழிவிரக்கப் பெருமூச்சால் உயிரே போய்விடும் போல் உளது. மேலும், தகை மையே இல்லாத இத்தமிழின விடிவுக்கென போராடுவதும் வீண், அப்போராட்டத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதும் வீண் எனவே எண்ணத்தோன்றுகின்றது.

சற்றே முனைப்பான ஈழத் தமிழினமே இப்படி என்றால் சற் றும் நினைவற்ற இத்தாய்த் தமிழகத் தமிழர்களை எண்ணும் போது ஒருசிறிதும் நம்பிக்கை எழவில்லை;

தமிழினவிடிவுக்கென முயல்வோர் தற்கொலை விரும்பிகள்— பேதைகள்—என்ற அவலம் தோன்றுகின்றது. எம்போன்றாரின் மனச்சோர்வுகள் நீங்க வழிஉண்டா? தமிழின விடிவுதான் உண்டா?

தமிழீழப் போராட்டத்தின் போங்குகளைத்திறனாய்வு செய்து, உலகின் பிறபகுதி மக்களின் விடுதலைப்போராட்டங்களுடன் ஒப் பிட்டு, இத்தாய்த் தமிழக மக்களின் விடுதலைக்குப் பொருந்தும் வழிமுறைகளை விளக்குங்கள். அவ்வழிமுறைகள் முழுதுமாகப் பொருந்த வில்லையானாலும் வெற்றியை நோக்கியாவது நம்மை அழைத்துச் செல்லுமல்லவா? இவண், தங்களின் வழி கேட்கும்,

—மா. செ, தமிழ்மணி, நெமலி.

O : *1250* : பெருமதிப்பிற்குரிய பாவலரேறு ஐயா அவர் களுக்குப் புரட்சி வணக்கங்கள்! நான் ''தமிழ்க் கிழமைஇதழ்களில் பிறமொழிக்கலப்பு'' என்னும் தலைப்பில் *1986* ஆம் ஆண்டு குமு தம், கல்கி, ஆனந்தவிகடன், இதயம் பேசுகிறது, தாய் ஆகிய இதழ்களில் ஆய்வு செய்து வருகிறேன்.

அவ்வாய்வுத் தொடர்பாகத்தங்கள் கருத்துகளைக் கடித வாயி லாகவும் பின்னர் நேர்காணல் வாயிலாகவும் அறிந்து ஆய்வு நோக்கைச் செம்மைப் படுத்திக்கொள்ள விரும்புகின்றேன். எனவே தங்களால் இயன்ற வகையில் துணைநிற்குமாறு கோரு கிறேன்.

பிற தென்மொழி (தனித்தமிழ்) அன்பர்கள் தங்கள் கருத்துகளை அறிவிக்க முன்வரினும் மகிழ்வுடன் ஏற்றுத் தேர்ந் தெடுத்த கருத்துகளை ஆய்வேட்டின் பின்னிணைப்பில் பெயருடன் வெளியிட்டுச் சிறப்பிப்பேன்.

எனவே இக்கடிதத்தைத் தென்மொழி இதழிலும் வெளி யிட்டுதவுமாறு வேண்டுகின்றேன். நன்றி.

இங்ஙனம் உண்மையுள்ள காரை. தமிழ்முடி. (க. சேகர்)
—ஆராய்வாளர், தமிழ்த்துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்-2

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005. (தமிழகம்)